ஆஹவந்தர் துணை.

பஞ்சபூத ரகசியமென்னும்

# பஞ்சபக்ஷிரத்தினம்.

இஃது,
இராய வேலூர் குயப்பேட்டை வைத்தியம்
சதயோகசிவஞானதேசிகராகிய
ம-ா-ா-ஸ்ரீ,
V. K. சுந்தரேஸ்வரமுதலியாரவர்கள்
மாணாக்கர்களுள் ஒருவராகிய
ஷை யூர் வித்வான்
வே. ஸ்ரீ,
பாலகிருஷ்ணமுதலியாரால்,
எழுதப்பட்டு,

சென்னை-புரசை.
பூ. சு. குப்புசாமிமுதலியார்
அண்டு சன்ஸ் அவர்களது.
ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1930.
நான்காம்பதிப்பு காப்பி 1000
விலை அணு 12.

REGISTERED COPY RIGHT.

உ

கடவுள் துணை.

# விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரியப்படுத்துவது யாதெனின்?

"பஞ்சபக்ஷிரத்தினம்" என்னும் இன்னூலானது 1867௵ (25-வது) ஆக்டின் (20-வது) பிரிவில் (6-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசிலும், இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும், காபிரைட் ரிஜிஷ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகையால் இந்த (பஞ்சபக்ஷிரத்தினம்) என்னுக் புத்தகத்தை ம-ா-ா-ஸ்ரீ, வித்துவான் வேலூர் வே. ஸ்ரீ. பாலகிருஷ்ண முதலியார் அவர்கள்பேரிலிருந்த ரிஜிஸ்தர் காபிரைட் சுதந்தரத்தை அடியிற் கையொப்பமிட்ட பூ. சு. குப்புசாமிமுதலியாராகிய நான் கிரயத்திற்கு பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருப்பதால் இன்னூலையாவது, அல்லது இதை வேறுபாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது இதில் ஏதேனும் பாகத்தை யாவது, என் உத்தரவன்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி அதனால்உண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

எமதுவிலாசம்,

**பூ. சு. குப்புசாமிமுதலியார்**

**அண்டு சன்ஸ்**

**ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடம்.**

வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

உ

கடவுள் துணை.

# நூன்முகம்.

எங்கும்நிறைந்த பராபரவஸ்துவாகிய கடவுளின்கிருபையினாலே, கடல்சூழ்ந்த இப்பூவுலகின் கண்ணுள்ள சகலருக்குந் துணைக்காரணமாக ஏற்பட்ட மகத்துக்களாகிய பதினெண் சித்தர்களில், சிரேஷ்டராய் விளங்கி யிராநின்ற அகஸ்திய மகாமுனிவர் தமது ஆவியினாலெழுந்த பஞ்சபூதங்களையும் பஞ்சபக்ஷியாக்கி அதன்பேரினால் ஒருசாஸ்திரம் ஏற்படுத்தி உலகினர்க்கு உதவினரென்று சிலசாஸ்திரங்களில் யெழுதியிருக்கின்றது. ரோமரிஷிவினாடி பஞ்சபக்ஷி என்றும் அதுரோமமுனிவரால் செய்யப்பட்டதென்றும் எழுதியிருக்கின்றது. இன்னும் போகர் பஞ்சபக்ஷியென்றும் மற்றுஞ்சில சாஸ்திரங்களாகவும் மச்சமுனிமுதலிய சித்தர்நூல்களில் ஆங்காங்கு சில இடங்களில் வரைந்திருக்கின்றது. இவைகளை யெல்லாம் நோக்குமிடத்து இந்தசாஸ்திரங்கள் ஷை முனிவர்களால் எழுதியதல்லவென்று ஏற்படுகின்றது. ஏனெனில் அநேகசாஸ்திரங்களில் அகஸ்தியர்முதலியோர் செய்த சாஸ்திரங்களெல்லாம் பிரளயகாலத்தில்வெள்ளத்தில் முழுகிவிட்டதாகவும் பிற்பாடு ஷை யாரிடம் பாடங்கேட்டவர்கள் மேல்படியார் பெயர்களையே வைத்து அநேக சாஸ்திரங்களை எழுதிவிட்டதாகவும் யேற்படுகிறது. இச்சந்தேகந் தீருவதற்கு "ஞானவெட்டியான்" யென்னும் புத்தகத்தை திருவள்ளுவநாயனார் பாடியதென்று சிலர் சொல்லுகிறார்கள். ஷை புத்தகத்தைச் சற்று கவனித்து பாயிரத்தின் இரண்டாவது செய்யுளில் "அவனிதனிஞானவெட்டி யருளயானும் நிகழ்திருவள்ளுவநாயனாருரைத்தவேத நிரஞ்சனமாம் நிலவுபொழி ரவிகாப்பாமே" என்பதைப்பார்க்குமிடத்து வள்ளுவர் செய்ததாயிருந்தால் தன்னையே துதித்துப் பாடுவரோ? அதுவுமல்லாமல் அந்நூல் செய்தவர் துரைசாமி யென்பவரென்றும், அவர்வள்ளுவருடைய அருளினால் பாடியதென்றும் மேற்படி நூலின் 287, 360, 911-வது, பாடல்களால் தெரிகின்றது. தவிர 534, 535, 536-வது, செய்யுள்களில் கிருஸ்துவர்களையும் மஹம்மதியர்களையும் நிந்தனைசெய்து பாடியிருப்பதைக் கவனித்தால், வள்ளுவர்செய்த சாஸ்திரமல்லவென்றும், அவரிருந்தகாலத்திற்கிருஸ்துவமதமும் மஹம்மதியமதமும் இவ்விந்துதேசத்தில் ஏற்படவில்லையென்

றுந் தெரிகின்றது. இதைப்போலவேதான் அனேகர் அனேகசாஸ்திரங்களையும் மேல்படி சித்தர்களின் பேரை வைத்து யெழுதியதாக அந்தந்த சாஸ்திரங்களால் நன்கு விளங்குகின்றது. அதுபோலவே இப்போதிருக்கும் பஞ்சபக்ஷி சாஸ்திரங்களை எழுதி யிருக்கிறார்கள் தவிர இதில் சொற்குற்றம் பொருள்குற்றம்விசேஷமிருக்கிறது. ஷெ சித்தர்கள்செய்ததாயிருந்தால் அப்படியிருக்காது. எனெனில் அவர்களெல்லாம் சங்கங்களில் ஜெயங்கொண்டவர்களென்றும் அகஸ்தியரே தமிழையும் தமிழ்சங்கத்தையும் ஆதியில் எற்படுத்தியவரென்று தெரிகிறபடியால், அப்படிப்பட்டவர்கள் இப்படிப்பட்ட சீர்கேடானகவிகளை செய்யமாட்டார்களென்பதை ஒவ்வொருவரும்தாங்களே தெரிந்துக் கொள்ளக்கூடும். ஆதலால் இப்போதிருக்கும் பஞ்சபக்ஷி சாஸ்திரம் தென்தேசத்து மரைக்கார்மார்களென்று சொல்லப்பட்டலப்பைகளால் எழுதியதாகவும் நன்றாய்த்தெரியவருகின்றது. அதிலும் இந்தசாஸ்திரம் இதுவரையிலும் முற்றுமேவெளிவந்ததில்லை ஆனால் இச்சாஸ்திரம் விசேஷப்பட்டதென்பது மாத்திரம் உலகப்பிரசித்தம். இதற்கு உதாரணமாக "பல்லிசொல்லுகாரனோடு பதில்பேசாதே, பஞ்சபக்ஷிக்காரனைப்பகைக்காதே, சரம்கற்றவனோடு சகவாசம் செய்யாதே" என்னும் பழமொழியும்உண்டு. இந்த ஒரு சாஸ்திரம் மாத்திரம் பூர்த்தியாய் சகலருக்குந் தெரிந்தால், சகலசுகங்களையும் அனுபவிக்கக் கூடுமென்பதையும், இச்சாஸ்திர மகத்துவமும் நன்றாய் விளங்கு மென்பதையு முத்தேசித்து, இங்கிலீஷ், தமிழ்,தெலுங்கு, முதலிய சகலபாஷைகளிலும் அதிக தெளிவோடு எழுதி அச்சிட எண்ணங்கொண்ட ஆவலுள்ளவனாய் இப்புத்தகத்தை முதலில் தமிழில் அச்சிடலாயினேன். இதில் சொற்குற்றம் பொருள் குற்றம் விசேஷ மிருக்குமாகையால் இதுபெரியோர்கள் நூலென்பதைக் கவனித்து ஷெ குற்றங்களை யின்னூலைக் கவனிக்கு மெனது நண்பர்கள் பெரிதும் மன்னிப்பார்களென் றுநம்புகின்றேன். மேலும்இதில் "பஞ்சபக்ஷி அஷ்டகர்மம்" என்பது மிகவுங் கடினமாகையாலும் அதை முற்றிலும் வேறுபாஷைகளில் வெளிப்படுத்த முடியாதாகையாலும் அப்படிவெளிப்படுத்தினும் கவர்ன்மெண்டார்சட்டத்துக்குவிரோதமாகுமென்பதைப் பற்றியும் ஜனங்கள் பொது நன்மைக்கு வேண்டியதைமாத்திரஞ் சேர்த்து மற்ற துஷ்கிருத்திய விஷயங்களையும் இன்னும் இதில் அனாவசியமான பழையசெய்யுள்களையும் எழுதாமல் சுருக்கினேன்.

## பஞ்சபக்ஷிவசியம்.

வில்வப்பலகையில் அடியிலிருக்குஞ் சக்கரத்தைக்கீறி அபிஷேகஞ்செய்து, எட்டுவித புஷ்பம் எட்டுதிக்கும் வைத்து ஐங்கோணத்திற்கு ஐந்துவித புஷ்பம்வைத்து தூபம்கொடுத்து ஆம், ஈம், ஊம், ஏம், ஓம், என்று 108 - உருவு ஜெபித்து பால், பாயாசம், இளநீர், நீர்மோர், பாணக்கம், ஐந்துவித நைவேத்தியம்வைத்து கர்ப்பூரதீபங் காட்டி, நம், மம், சிம், வம், யம் என்று லக்ஷம் உருவு ஜெபித்து தேங்காயுடைத்து, ஐந்துவித நூல்போட்டு, ஐந்துவித எண்ணைவிட்டு ஐந்து தீபமேற்றிவைத்து பஞ்சபக்ஷிநமாவென்று தெண்டனிட்டு நீர்மாத்தவும். இப்படி ஐந்துநாள் செய்யவும் அப்போது அதிக சுத்தியாக இருக்கவும். பிறகு ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்யவும். அப்போது பக்ஷிசாபம்நீங்கி பக்ஷிவித்தை பலிக்கும்.




### பஞ்சபக்ஷி பூஜையின் பலன்-நேரிசை-வெண்பா.

காகத்தெழுத்தாற் கடிதாந்தையைக்கட்டி, வாகுற்றக் கோழிவழிமறித்துப்—பாகுற்ற, வல்லூறைத்தொட்டு வருமயிலைப்பூசிப்பார் எல்லோருமீடேறுவார்.

குறிப்பு—ஷை செய்யுளின் உண்மைக்கருத்து யோகவாசிகளுக்கு நன்குவிளங்கும்.

### பக்ஷிவித்தை கற்றவரின் மகிமை.

பக்ஷியறிந்தவரைப் பன்னிப்பகைத்தூதிதங், கட்சிபுறிந்தவர்கள் கருவழிவர்—சூட்சி, எறியக்குடிகெடுவ ரேதுவின்றி நொந்தலைவர், அறியாக்கடிகையினிலாம்.

இதற்குப் பின்னால்வரும் "தொழில்கால அளவு" என்பதற்கு இதையும் கவனித்துக்கொள்ளவும்.

# சூரியோதய அஸ்தமன காலம்.

| மாதங்கள். | தேதி | உதையம். | | அஸ்தமனம். | |
|---|---|---|---|---|---|
| | | மணி | நிமி | மணி | நிமி |
| ஜனவரிமீ … … … | 1 | 6 | 28 | 5 | 30 |
| | 10 | 6 | 27 | 5 | 33 |
| | 20 | 6 | 26 | 5 | 34 |
| | 30 | 6 | 22 | 5 | 38 |
| பிப்ரவரிமீ … … … | 10 | 6 | 17 | 5 | 43 |
| | 20 | 6 | 15 | 5 | 45 |
| | 28 | 6 | 11 | 5 | 49 |
| மார்ச்சுமீ … … … | 10 | 6 | 7 | 5 | 54 |
| | 20 | 6 | 1 | 5 | 59 |
| | 30 | 5 | 57 | 6 | 3 |
| ஏப்ரல்மீ … … … | 10 | 5 | 52 | 6 | 8 |
| | 20 | 5 | 47 | 6 | 13 |
| | 30 | 5 | 43 | 6 | 17 |
| மேமீ … … … | 10 | 5 | 39 | 6 | 21 |
| | 20 | 5 | 36 | 6 | 24 |
| | 30 | 5 | 34 | 6 | 26 |
| ஜூன்மீ … … … | 10 | 5 | 32 | 6 | 28 |
| | 20 | 5 | 31 | 6 | 29 |
| | 30 | 5 | 31 | 6 | 28 |
| ஜூலைமீ … … … | 10 | 5 | 33 | 6 | 27 |
| | 20 | 5 | 34 | 6 | 26 |
| | 30 | 6 | 36 | 6 | 24 |
| ஆகஸ்டுமீ … … … | 10 | 5 | 41 | 6 | 19 |
| | 20 | 5 | 35 | 6 | 15 |
| | 30 | 5 | 49 | 6 | 11 |
| செப்டம்பர்மீ … … … | 10 | 5 | 53 | 6 | 7 |
| | 20 | 5 | 57 | 6 | 3 |
| | 30 | 6 | 8 | 5 | 57 |
| அக்டோபர்மீ … … … | 10 | 6 | 8 | 5 | 52 |
| | 20 | 6 | 11 | 5 | 49 |
| | 30 | 6 | 16 | 5 | 44 |
| நவம்பர்மீ … … … | 10 | 6 | 21 | 5 | 39 |
| | 20 | 6 | 21 | 5 | 35 |
| | 30 | 6 | 26 | 5 | 34 |
| டிசம்பர்மீ … … … | 1 | 6 | 27 | 5 | 32 |
| | 10 | 6 | 28 | 5 | 32 |
| | 20 | 6 | 29 | 5 | 31 |
| | 30 | 6 | 29 | 5 | 31 |

பின்னால் "தொழில்கால அளவு" என்று யெழுதி இருப்பதில் இங்கிலீஷ் மணிகணக்கை மாத்திரம் கவனித்தால் சிலவேளைகளில் பலன் தவறிவிடும். நமக்கு சூரியன் உதையமாகிறதிலிருந்து 60-நாழி கைவரையில் ஒருநாள் ஜாதகங்கள் எழுதும்போதும் சூரிய உதையாதி நாழிகையென்றுதான் எழுதுவார்கள். ஆதலால் மேல்காட்டியுள்ள சூரியோதய கணக்கின் பிரகாரம் இங்கிலீஷ் மணியை கணக்கிட சரியாயிருக்கும். பலன்பிசகாது (உதாரணம்) ஜுன்மீ 20உ க்கு 5-மணி-31-நிமிஷத்திற்கு சூரியன்உதையமாகிறபடியால்-6-மணியிலிருந்து 8-24-வரையில் முதல் ஜாமம் என்று பொதுவாய் எழுதியது 7-மணி-55-நிமிஷம்வரையிலுமே முதல்ஜாமம்ஆகிறது. இப்படியே மற்றதையும் கணக்கிட்டுக் கொள்ளவும். நெட்டால், பினாங்கு, சிங்கப்பூர், முதலிய பிரதேசங்களில்வாழும் நமது தமிழ்மக்களுக்கும் உபயோகப்படுமாறு தேசசமஸ்காரமும் எழுதலாயினேன்.

நமது இந்தியா தேசத்தில் சென்னை இராஜதானியின் முக்கிய பட்டணமாகிய மதராசில் - 12 - மணிக்கு மற்றதேசங்களின் மணி விவரம் இதனடியில் எழுதியபடியாகும்.

| | மணி. | நிமி. | செகிண்டு. |
|---|---|---|---|
| மதருஸ் | 12 | 0 | 0 |
| சிங்கபூர் | 1 | 30 | 0 |
| பினாங்கு | 1 | 30 | 0 |
| காலி | 11 | 50 | 48 |
| கொழும்பு | 11 | 49 | 24 |
| நுவரெலி | 11 | 53 | 4 |
| கண்டி | 11 | 52 | 32 |
| மட்டக்களப்பு | 11 | 56 | 24 |
| கன்னியாகுமரி | 11 | 40 | 12 |
| அனந்தசயனம் | 11 | 38 | 4 |
| திருகோணமலை | 11 | 54 | 28 |
| திருநெல்வேலி | 11 | 40 | 44 |
| இராமேஸ்வரம் | 11 | 47 | 28 |
| இராமநாதபுரம் | 11 | 45 | 16 |
| யாழ்ப்பாணம் | 11 | 50 | 4 |
| மதுரை | 11 | 42 | 28 |
| கொச்சி | 11 | 35 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | 11 | 45 | 32 | |
| நாகப்பட்டணம் | 11 | 49 | 36 | |
| தஞ்சாவூர் | 11 | 46 | 44 | |
| திருச்சினாப்பள்ளி | 11 | 44 | 48 | |
| கும்பகோணம் | 11 | 48 | 4 | |
| கோயம்பத்தூர் | 11 | 37 | 56 | |
| கள்ளிக்கோட்டை | 11 | 33 | 14 | |
| நீலகிரி | 11 | 36 | 56 | |
| சேலம் | 11 | 42 | 36 | |
| கூடலூர் | 11 | 49 | 8 | |
| புதுச்சேரி | 11 | 49 | 20 | |
| மைசூர் | 11 | 36 | 52 | |
| காஞ்சீபுரம் | 11 | 49 | 0 | |
| ஆற்காடு | 11 | 47 | 20 | |
| பெங்களூர் | 11 | 40 | 28 | |
| சித்தூர் | 11 | 40 | 44 | |
| நெல்லூர் | 11 | 49 | 56 | |
| கடப்பை | 11 | 14 | 44 | |
| பெல்லாரி | 11 | 37 | 40 | |
| ரெங்கோன் | 1 | 0 | 0 | |
| ஹைதராபாத் | 11 | 44 | 36 | |
| விஜயநகரம் | 11 | 56 | 12 | |
| புனா | 11 | 25 | 32 | |
| பம்பாய் | 11 | 21 | 20 | |
| பரோடா | 11 | 20 | 4 | |
| கல்கத்தா | 12 | 23 | 28 | மாலை P. M. |
| காசி | 12 | 2 | 4 | |
| பீகின் | 2 | 16 | 0 | |
| டோகியோ | 3 | 49 | 0 | |
| மெல்போரண் | 4 | 10 | 0 | |
| நியூயார்க் | 1 | 34 | 0 | |
| கிரீனிச் | 6 | 30 | 0 | காலை. A. M. |
| பேரிஸ் | 6 | 39 | 0 | |
| பெர்லின் | 7 | 23 | 0 | |
| நெடால் | 8 | 34 | 0 | |
| மாஸ்கோ | 9 | 1 | 0 | |

உ

பஹுவந்தர் துணை.

## பஞ்சபூதரகசியமென்னும்

# பஞ்சபக்ஷிரத்தினம்.

### காப்பு.

### நேரிசை-வெண்பா.

உன்னியொருவன் உரைத்தமுதலெழுத்தை
பன்னிப்பாவையாய்ப் பாவித்து—வன்னி
உதையதிசைப்பக்ஷி உண்மையுரைக்க
கதைகாவிப்பொருளே காப்பு. (1)

### நாமகள் துதி.

தூய்யமலருறையுந் தோகாயுனதம்பொற்
செய்யமலர்ப்பாதம் சேவித்தேன்—வையத்
தைந்துவகைப்பக்ஷி யழையுங்குணமென்றன்
சிந்தைதனில்நிற்கவே செய். (2)

### முனிவர் நூன்முறை.

ஒன்றுதிசைக்குருவி யொன்றிவருமோர்த்ரா தன்
நின்றநிலையாருடத்தில் நேருமே—நன்று
வழுவாதுரைத்தாயும் வல்லவர்கள்சொன்ன
முழுவாகடத்தின் முறை. (3)

## முதல் அதிகாரம்.

### நூல்.

மொழிக்குமுதலெழுத்தே முன்னுதிக்குமாமதனைப்
பழித்தவன் தன்னிலையும் பார்த்து—வழிப்பெறவே
பேரால்வருவனவும் பேதமறிக்துணர்ந்து
ஆராய்ந்துசொல்வ தறி. (4)

ஷை பாட்டிற்கு ஒருவன் ஒரு காரியத்தைக் குறித்து நன்மை தீமை கேட்பானுகில் அவன்சொல்லும்படியான முதலெழுத்தையும் நின்ற நிலையையும் பக்ஷியாக்கிக் கொள்ளவேண்டுமென்றீ சில புத்தகங்களில் எழுதியிருக்கிறார்கள். ஷை பாட்டிற்கு கருத்து இதல்ல மற்றும் அதன் கருத்து என்னவெனில், மொழிக்குமுத லெழுத்தே முன்னுதிக்குமாம்=சகலமொழிகளுக்கும் முன்னுதிக்கும்படியானது மௌனஎழுத்து என்றுபெயர். அப்படிப்பட்ட எழுத்தை அறிந்து அதனைப் பழித்தவன் = அதை ஜெயம்பண்ணினவன், தன்னிலேயும் பார்த்து தன்னுடைய பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று சொல்லப்பட்ட பஞ்சபூத சரநிலையையுங்கண்டு அதுமூல்யமாய் நடக்கப்புகும் நன்மைதீமைகளை சொல்லறியும் வழியைக் கண்டறியவேண்டுமென்பது. ஆதலால் தான் பக்ஷிசாஸ்திரம் சரநூலோடு சம்பந்தப்பட்டதென்பது. மேலும், "உன்னியொருவன் உறைத்தமுதலெழுத்தை" என்னும் முதல்பாட்டிற்கு மாத்திரம் ஒருவன்வந்து கேழ்க்கும் அல்லது நாம் நினைக்கும் முதலெழுத்தைப்பக்ஷியாக்கி அந்த பக்ஷி நாம்நினைத்த அல்லது இன்னொருவன்கேட்டகாலத்தில் என்ன விவகாரத்தில் இருக்கிறதோ அதை தெரிந்து பலன்சொல்ல சரியாயிருக்கும். இந்த புத்தகத்தில் பலருக்கும் உபயோக மாகும்பொருட்டு ஒவ்வொரு விஷயமும் அதிக தெளிவாயெழுதி யிருக்கின்றது இதுநிற்க இப்பக்ஷிசாஸ்திரத்தில் முதலில்அறியவேண்டியது என்னவெனில் பக்ஷம். அது இருவகைப்படும். அதாவதுபூர்வபக்ஷம், அல்லது சுக்கிலபக்ஷம், அல்லது வளர்பிரை என்பது ஒன்று இரண்டாவது அமரபக்ஷம் அல்லது கிருஷ்ணபக்ஷம் அல்லது தேய்பிரை.

## இதின் விபரம்.

| | |
|---|---|
| 1-வது. பூர்வபக்ஷம் சுக்கிலபக்ஷம் வளர்பிறை | அமாவாசை முடிவான நாழிகையி லிருந்து பௌர்ணமி முடிவாகும் நாழிகை வரைக்கும் பூர்வபக்ஷம் சுக்கிலப்பக்ஷம் வளர்பிரை என்று பேர். |
| 2-வது. அமரபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் தேய்பிறை | பௌர்ணமி முடிவான நாழிகைமுதல் அமாவாசை முடிவாகும் நாழிகை வரையிலும் தேய்பிரை, கிருஷ்ணபக்ஷம், அமரபக்ஷம், யென்று பேர். |

இதில் பூர்வபட்சத்திற்கு பட்சிகளின் தொழில் பலன் வேறு அமரபட்சத்தில் பட்சிகளின் தொழில்பலன் வேராகையால்முதல்

பக்ஷம்தெரிந்து பலன்தெரியவேண்டும். பஞ்சபட்சி என்பது ஐந்து வகைப்பக்ஷி அதாவது வல்லூரு, ஆந்தை, காகம், கோழி,மயில் என ஐந்தாகும்.

## பூர்வபக்ஷம் அல்லது வளர்பிறை.

பக்ஷம் இரண்டிற்கும் பக்ஷிகளின் அக்ஷரம் அ-இ-உ-எ-ஒ

## பூர்வபக்ஷம் அக்ஷரப் பக்ஷி.

அகரமேவல்லூரு ஆந்தையிகரமதாம்
உகரங்கருங்காகம் உன்னிப்பகரில்
எகரமதுகோழி எஞ்சான்றுமஞ்சை
ஒகரமுயிர்மெய்யாய்த் துரை. (5)

(இ-ள்.) அகரமுதலாகிய, அ-க-ங-ச-ஞ-ட-ண-த-ந-ப-ம-ய-ர-வ-ழ-ள-ற-ன. முதலானசப்தமெல்லாம் வல்றாறு.

இகரமுதலாகிய, இ - கி-ஙி-சி-ஞி-டி-ணி-தி-நி-பி-மி-யி-ரி-வி-ழி-ளி-றி-னி. முதலானசப்தமெல்லாம் ஆந்தை.

உகரமுதலாகிய, உ - கு - ஙு-சு-ஞு-டு-ணு-து-நு-பு-மு-யு-வு-ழு-ளு-று-னு. முதலான சப்தமெல்லாம் காகம்.

எகரமுதலாகிய, எ - கெ-ஙெ-செ-ஞெ-டெ-ணெ-தெ-நெ-பெ-மெ - யெ - ரெ - வெ-ழெ-ளெ-றெ-னெ. முதலான சப்தமெல்லாம் கோழி.

ஒகரமுதலாகிய, ஒ - கொ - ஙொ-சொ-ஞொ-டொ-ணொ-தொ-நொ-பொ-மொ-யொ-ரொ-வொ-ழொ-ளொ-றொ - னொ. முதலான சப்தமெல்லாம் மயில்.

| அ | இ | உ | எ | ஒ |
|---|---|---|---|---|
| வல்லூறு. | ஆந்தை. | காகம். | கோழி. | மயில். |

ஷை பக்ஷிகள் ஐந்திற்கும் தொழிகள் ஐந்து.

அதாவது-ஊண்-நடை-அரசு-நித்திரை-மரணம்.

ஊண் என்பது போஜனம்-புசிக்குதல், நடையென்பது, உலாவித்திரியுதல், அரசுயென்பது ராஜரீகஞ்செய்தல், நித்திரை யென்பது தூங்குதல், மரணம் செத்துப்போகுதல் அல்லது உயிர் விடல் ஐந்துபட்சியும் மேற்கூறிய ஐந்துகாரியங்களையும் பிரதி தினமும் பரிச்யயும்.

## செய்கைக் குறிப்பு.

ஊண் பக்ஷியானது நடந்து அரசுசெய்து தூங்கிசாகும். நடக்கும் பக்ஷியானது முறையே நடந்து அரசாண்டு தூங்கி செத்துபோஜனம் செய்யும். இப்படி முறையே ஒவ்வொருபட்சியும் செய்யும் மேற்கூறியதொழில்கள் ஒவ்வொருபட்சிக்கும் பகலில்ஐந்தி இரவில் ஐந்து ஆகபத்தாகும்.

## தொழில்கால அளவு.

ஒருநாளைக்கு தொழில்கள்பத்து யென்று கூறியதற்கு ஒருநாளைக்கு மொத்தம் இரவும்பகலும் சேர்ந்து-60-நாழிகையாகும் அதாவது-24-மணி. அப்போது ஒவ்வொரு தொழிலுக்கு நாழிகை - 6-அல்லது 2-மணியும் 24 - நிமிஷமும் ஆகும். ஆதலால் பகல்-5-ஜாமமும் இரவு 5-ஜாமமுமாக பிரிவுபடும்.

## ஜாமப்பகுப்பு.

பகல் அல்லது இராத்திரி நாழிகை 30 - க்கு ஜாமம் 5-க்கு கடிகாரரீதியாய் மணிவிவரம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலை | 6 | 0 | மணிமுதல் | 8 | 24 | மணிவரையில் | 1 ம் | ஜாமம். |
| ,, | 8 | 24 | ,, | 10 | 48 | ,, | 2 ம் | ,, |
| ,, | 10 | 48 | ,, | 1 | 12 | ,, | 3 ம் | ,, |
| மாலை | 1 | 12 | ,, | 3 | 36 | ,, | 4 ம் | ,, |
| ,, | 3 | 36 | ,, | 6 | 0 | ,, | 5 ம் | ,, |

இதேபிரகாரமே இறவிற்கும் ஆகும்.

## ஜாமநாழிகை விபரம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நாழி | 1 | முதல் | 6 | வரையில் | 1 ம் | ஜாமம் |
| ,, | 6 | ,, | 12 | ,, | 2 ம் | ,, |
| ,, | 12 | ,, | 18 | ,, | 3 ம் | ,, |
| ,, | 18 | ,, | 24 | ,, | 4 ம் | ,, |
| ,, | 24 | ,, | 30 | ,, | 5 ம் | ,, |

இதில் அந்தரம் பிரிக்குங்காலத்தில் மேற்கூறிய ஒவ்வொரு ஜாமமும் ஐந்தாக பிரிவுபடும் அது பின்னால்வரும். இதுநிற்க ஒவ்வொருநாட்களில் ஒவ்வொருபட்சி முழுநாளும் செத்துக்கிடக்கும் இதற்கு படுபக்ஷி யென்றுபெயர். அதாவது செத்தபட்சி ஒவ்வொருநாளில் பகல் முழுதும் ஒருபட்சி அமுல்செய்யும் அதற்கு அரசுபட்சி யென்றுபெயர். மேற்கூறியபடி இரவு முழுதும் ஒருபட்சி அமுல் செய்யும் அதற்கும்பேர் அரசுபட்சிதான். அதிகாரம் செய்கிறபட்சி ஒருநாள்முழுதும் செய்யாமல் 30 நாழிகையாகிய அரைநாள் தான் செய்யும். படுபட்சி அல்லது செத்தபட்சி 60 நாழிகையாகிய முழு நாளும் செத்துக்கிடக்கும்.

அஞ்சுபரவையு மோராருகடிகையிலும்
எஞ்சவுண்டுதுஞ்சிடுமென் றெண்ணாதே—வஞ்சியரே
ஒன்றென்றேநாளாறு கடிகையிலேயுண்ணும்
என்றென்றேசொன்னா ரெமக்கு. (6)

மேலும் உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருபட்சியிருக்கும் அது அறியும்விதம் பின்னால்வரும். அவர்கள்பக்ஷி மேற்கூறியபடி எந்தெந்த தினங்களில் படுபட்சியாய் செத்துக் கிடக்கிறதோ அந்த தினங்களில் யாதொருகாரியமும் செய்யக்கூடாது. அப்படி செய்தால் கஷ்டம் நஷ்டம் முதலியதும் வரும். அல்லது சித்திக்காமலும்போகும். எந்ததினங்களில் அவர் பக்ஷி அதிகாரம் செய்கிறதோ அந்ததினத்தில் அரசுசெய்யும் ஜாமத்தில் அதிலும் அரசு அந்திரகாலத்தில் தாங்கள் நாடிய தொழிலை செய்ய சித்திக்கும் இதுதான் முக்கியமாய் தெரிந்துக்கொள்ளவேண்டியது. இனிமேற்கூறியஐந்து பட்சிகளின் தொழிலைச்சொல்லுவாம்.

## பூர்வபக்ஷம் பகல்.

வாரங்கள் எழிற்கும் ஊண் அல்லது அதிகாரப் பட்சி.

செவ்வாயருக்கன்வல்லூருண் சிறந்ததிங்கள் புதனாந்தை
சவ்வார்வியாழக்காரண்டம் கருதும்வெள்ளிக்கோழியதாம்
மவ்வார்சனியில்மயிலுண்ணும் மானேபூர்வப்பகல்தனில்
இவ்வாரின்னூல்குருமுனிவர் இயம்பலுற்றாருலகுக்கே. (7)

(இ-ள்.) செவ்வா ஞாயிறு இருவாரமும் பகல்முழுதும் வல்லூரின் அதிகாரம் அதிலும் ஷை இருவாரங்களில் முதல்ஜாமத்தில் வல்லூறு ஊண் தொழிலிலிருக்கும். திங்கள் புதன் இரண்டுநாள் பகல் முழுதும் ஆந்தையின் அதிகாரம் அதிலும் ஷை இருவாரங்களில் முதல் ஜாமத்தில் ஆந்தை உண்ணும்.

வியாழம் ஒருநாள் பகல்முழுதும் காகம் அதிகாரம் அதிலும் முதல்ஜாமம் காகம் உண்ணும்.

வெள்ளி பகல்முழுதும் கோழியின் அதிகாரம் அதிலும் முதல் ஜாமம் கோழியுண்ணும்.

சனி பகல் முழுதும் மயிலின் அதிகாரம் அதிலும் முதல்ஜாமம் மயில் உண்ணும்.

இப்படி ஒருஜாமத்தில் ஒருபட்சி உண்டியிலிருந்தால் அதற்கடுத்தபட்சி நடக்கும் அதற்கடுத்த பட்சி அரசுசெய்யும் அதற்கடுத்த பட்சிதூங்கும் அதற்கடுத்த பட்சிசாகும். இதுபகலுக்கு மாத்திரம் பூர்வபட்சம் இரவிற்கு முதல்ஜாமத்தில்உண்ணும் பக்ஷியானது இரண்டாம் ஜாமத்தில் அரசுசெய்து மூன்றும்ஜாமத்தில்செத்து நாலாம் ஜாமத்தில் நடந்து ஐந்தாம் ஜாமத்தில் தூங்கும்.

## பூர்வபக்ஷம் பகல் இரவு பக்ஷிகளின் செய்கை.

உண்டுநடந்து உலகாண்டுநித்திரையாய்த்
தண்டமுற்பகலிற் சாவாகும்—உண்டு
அரசாயிறந்து அனேகவழிநடந்து
இரவாலுறங்கு மிடை. (8)

அக்ஷரம் - 5 - பட்சி - 5 - ஜாமம்-5-க்கும்-தொழில்-விவரம்.

அடியில்வரும் பாட்டுகள் முதல்ஜாமத்திற்கு மாத்திரம்.

### பூர்வபக்ஷம்-பகல்தொழில்.

ஞாயிறு—செவ்வா.

வல்லூறுமுண்ண ஆந்தைவழிநடக்க
நல்லசிறுகாகமது நாடாளப்—பொல்லா
வுறக்கமதுகோழி யொன்றொடியீங்கே
யிறக்குமயிலென்றே யியம்பு, (9)

திங்கள்—புதன்.

ஆந்தையமுதுண்ண அருங்காகந்தானடக்க
போந்திருந்தகோழியது பூபதியாம்—சாந்த
மயிலுமுறங்க மடியுமேவல்லூறு
பயிலப்புதுண்மையெனப் பார். (10)

வியாழம்.

காகமுண்ணக் கருங்கோழிதானடக்க
வேறுண்டமாமயிலும் வேந்தாகும்—சீரண்டும்

வல்லூறுதூங்க வலுவாந்தைதானிறக்க
சொல்லூருகாட்டும் தொகை. (11)

வெள்ளி.

கோழியமுதுண்ணக் குதித்துமயில்நடக்க
வாழுமரசனும் வல்லூறு—தோழிகேள்
ஆந்தையுறக்க அருங்காகம்தானிறக்க
மாந்தர்க்கழகாய் மதி. (12)

சனி.

காந்தமயிலுண்ணக் கதித்தகுரல்வல்லூறு
தோந்தமுடனேநடக்கத் தூய்மொழியீர்—ஆந்தை
அரசுபதியாம் அருங்காகம்தூங்கச்
சரசுபொற்கோழியதும் சாம். (13)

## அந்தர விவரம்.

மேலேசொல்லிய ஜாமம் 1-க்கு நாழிகை 6 - ல் அந்தரம் பிரிக்கையில் ஒவ்வொருநூல்களில் பலபலவிதமாய் ஷை அந்தரகணக்கு சொல்லியிருக்கிறபடியால் அதுகளை தவிர்த்து அனுபவமாய்வருகிறதை மாத்திரம் இப்புத்தகத்தில் எழுதலாயினேன்.

உண்பானுக்கொன்றேகால் ஒன்றரையில்தானடக்க
கண்பார்த்தரசிரண்டில் காண்போமே—பெண்பாவாய்
தூங்குவதும்முக்காலாய் துஞ்சுவதும்தானரையாய்
பாங்குடையபட்சிப் பலன். (14)

## ஷை செய்யுளின் விவரம்.

| | | |
|---|---|---|
| ஊணிற்கு அந்தரநாழிகை | | $1\frac{1}{4}$ |
| நடைக்கு | ,, | $1\frac{1}{2}$ |
| அரசுக்கு | ,, | 2 |
| துயிலிற்கு | ,, | $\frac{3}{4}$ |
| சாவுக்கு | ,, | $\frac{1}{2}$ |

ஆக மொத்தம் நாழிகை 6.

இது பூர்வபட்சம் பகல் இரவு இரண்டிற்கும் சரி.

மேற்காட்டியிருப்பதின் விவரமாவது ஒருபட்சி உண்டிதொழில் செய்யும்போது அதற்கு நாழிகைமொத்தம் 6. இதற்கு உண்டிபுத்திஎன்று பெயர். இதில் அந்தரம் என்பது மேற்கூறிய உண்டிநாழிகை 6-லேயே உண்டியில் உண்டி $1\frac{1}{4}$-நாழிகையும், உண்டியில் நடை $1\frac{1}{2}$-நாழிகையும், உண்டியில் அரசு 2-நாழிகையும், உண்டியில் தூக்கம் $\frac{3}{4}$-நாழிகையும், உண்டியில்சாவு $\frac{1}{2}$ - நாழிகையும் ஆகமொத்தம் 6-நாழிகைக்குசரி

## பூர்வபக்ஷம் பகல் தொழில்முறைச்சக்கரம்.

ஞாயிறு—செவ்வா.

அதிகாரப்பக்ஷி — வல்லூறு.

படுபக்ஷி { ஞாயிறு. ஆந்தை.
செவ்வா. கோழி.

| சாமம் | வல்லூறு. அ. | ஆந்தை. இ. | காகம். உ. | கோழி. எ. | மயில். ஒ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ |
| 2. | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 4. | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 |
| 5 | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ |

## பூர்வபக்ஷம் பகல் தொழில்முறைச்சக்கரம்.

திங்கள்—புதன்.

அதிகாரப்பக்ஷி — ஆந்தை.

படுபக்ஷி { திங்கள் காகம். புதன் மயில்.

| சாமம். | ஆந்தை. இ. | காகம். உ. | கோழி. எ. | மயில். ஒ. | வல்லூறு. அ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ |
| 2. | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 4 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 |
| 5 | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ |

## பூர்வபக்ஷம் பகல் தொழில்முறைச்சக்கரம்.

### வியாழம்.

அதிகாரப்பக்ஷி — காகம்.

படுபக்ஷி—வல்லூறு.

| சாமம். | காகம். உ. | கோழி. எ. | மயில். ஒ. | வல்லூறு. அ. | ஆந்தை. இ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ |
| 2. | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 4. | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 |
| 5. | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ |

## பூர்வபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

வெள்ளி.

| அதிகாரப்பக்ஷி — கோழி. படுபக்ஷி—ஆந்தை. | | | | | |
|---|---|---|---|---|---|
| சாமம். | கோழி. எ. | மயில். ஒ. | வல்லூறு. அ. | ஆந்தை இ. | காகம். உ. |
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ |
| 2. | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 4. | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 |
| 5. | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ |

## பூர்வபக்ஷம் பகல் தொழில்முறைச்சக்கரம்.

சனிக்கிழமை.

| அதிகாரப்பக்ஷி—மயில். படுபக்ஷி—வல்லூறு. | | | | | |
|---|---|---|---|---|---|
| சாமம். | மயில். ஒ. | வல்லூறு. அ. | ஆந்தை. இ. | காகம். உ. | கோழி. எ. |
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ |
| 2. | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 4. | துயில் $\frac{3}{4}$ | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 |
| 5 | சாவு $\frac{1}{2}$ | ஊண் $1\frac{1}{4}$ | நடை $1\frac{1}{2}$ | அரசு 2 | துயில் $\frac{3}{4}$ |

## 2-ம். அதிகாரம்.

பூர்வபக்ஷம் இரவு.

வாரங்கள் 7-க்கும் ஊண் அல்லது அதிகாரப்பக்ஷி.

ஞாயிறுசெவ்வாய்காரண்டம் நல்லபுந்திமதிகோழி
மாயப்பொன்னேமயிலாகும் வளரும்வெள்ளிவல்லூராம்
ஓயாஆந்தைசனியுண்ணும் உயருங்கங்குலுணர்கென்ன
ஆயும்வேதக்குருமுனியும் அருளாலிசைந்தஅரும்பொருளே. (15)

## குறிப்பு.

அடியில்வரும் பாட்டுகளுக்கும் மற்றநூல்களின் செய்யுள்களுக்கும் அதிகவித்தியாசமிருந்தாலும் இதுதான் சரியானதும்உண்மையானதுமாம். அமரபக்ஷத்தில் முற்றும் மாறுக விருந்தாலும் இந்தக் கணிதமேசரி. இதுதெரியாமலும் சோதிஷத்தில் காலசக்கிர திசை கணிதம்தெரியாமலும் திகைப்பவர்பலர். புத்திசாலிகள் இந்த கணிதத்தையும் முன்னூல் கணிதத்தையும் ஒத்திட்டுப்பார்த்து கவனிப்பார்களானல் இதுதான் உண்மையெனவிளங்கும். இதைமாத்திவைத்திருந்ததால் தான் பக்ஷிபலன் சரியாய்வருவதில்லை.

அக்ஷரம். 5. பக்ஷி. 5. ஜாமம்-5-க்கும் தொழில் விவரம்.

## பூர்வபக்ஷம் இரவு தொழில்.

ஞாயிறு—செவ்வா.

காகமமுதுண்ணக் கார்கோழி தானரசாய்
சீரானமயிலதுவும் செத்துவிழத்—தேகாய்கேள்
வல்லூறுநடக்கும் வளராந்தைகண் துயிலும்
நல்லூரில்நீயறிந்து பார். (16)

திங்கள்—புதன்.

கோழியமுதுண்ணக் கூர்மயிலுந்தானரசாய்
சேடியதாம்வல்லூரும் செத்துவிடும்—தோழிகேள்
ஆந்தையேதாகுமே அருங்காகந்தூங்குமே
சாந்தகுணமிக்குமே தான். (17)

வியாழம்.

தோகையமுதுண்ணத் தொழில்வல்லூர் தானரசாய்
ஆந்தையதுசெத்துவிடும் ஆரணங்கே—ஆகையினில்
காகமதுநடக்க கருங்கோழிகண் துயில
போகமுறும்பெண்ணேநீ பார். (18)

வெள்ளி.

வல்லூறுமுண்ண வளராந்தைதானரசாய்
பொல்லாதகாகமது போயிறக்க—நல்லாய்கேள்
கோழியதுநடக்குங் கோலமயில்கண் துயிலும்
நாழியதுநன்றாகும் பார். (19)

சனி.

ஆந்தையமுதுண்ணும் அருங்காகமரசுசெய்யும்
சேர்ந்ததொருகோழியதும் செத்துவிடும்—ஏந்திழையே
போகமயில்நடக்கப் போயுறங்கும்வல்லூறு
யோகமுண்டு நமக்கே யினி. (20)

ஆண்பெண் அவயவங்களின்

# இரேகை சாஸ்திரம்.

சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த நம்முன்னோர்கள் மிகச் சிறந்த அனேகநூற்களை நமக்கு இம்மை மருமைத்தனவாக வருளிச் செய்தனர். அவைகளை அறிந்துரைப்பது அருமையாய் விட்டன ஆதலின் அவைகளின் பொருளையறிந்து யாவரும் எளிதில் உணரும் படியாய் ஆயுள், செல்வம், புகழ், புத்திரகளத்திராதி சம்பத்துசீலமு பேரின்பமாகிய யின்பங்களை பூரணமாக யாவத்திராளும் இந்த ரேகை கண்ட சாஸ்திரமானது (ஆண்பெண்) அவயவங்களிலுள்ள ரேகை கள் உள்ளங்கால்முதல் உச்சி வரையினும் ஒவ்வொன்றிற்கும் ஸ்ரீக ளிடத்தும் புருஷர்களிடத்தும் விதிப்படி ஆராய்ந்து இந்நூலின் லட் சணங்களை பரிசோதிக்கில் ஆயுள், செல்வம், புகழ், சீலம், புத்திரகள த்திரசுகம் ஆகிய இவைகளும் மற்றுமுள்ளவைகளும் இவ்வளவின வென்று ஒவ்வொருவரும் எளிதிலறியலாம்.

புத்தகம்-1-க்கு விலை அணா 8.

## பூர்வபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

ஞாயிறு—செவ்வா.

| அதிகாரப்பக்ஷி — காகம்.<br>படுபக்ஷி { ஞாயிறு ஆந்தை. செவ்வா கோழி. | | | | | |
|---|---|---|---|---|---|
| சாமம். | காகம். உ. | கோழி, எ. | மயில். ஒ. | வல்லூறு. அ. | ஆந்தை. இ. |
| 1. | ஊண் 1¼ | அரசு 2 | சாவு ½ | நடை 1½ | துயில் ¾ |
| 2. | அரசு 2 | சாவு ½ | நடை 1½ | துயில் ¾ | ஊண் 1¼ |
| 3. | சாவு ½ | நடை 1½ | துயில் ¾ | ஊண் 1¼ | அரசு 2 |
| 4. | நடை 1¼ | துயில் ¾ | ஊண் 1¼ | அரசு 2 | சாவு ½ |
| 5. | துயில் ¾ | ஊண் 1¼ | அரசு 2 | சாவு ½ | நடை 1½ |

## பூர்வபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

ஞாயிறு—செவ்வா.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிகாரப்பக்ஷி — கோழி. | | | | | |
| படுபக்ஷி { திங்கள். காகம். புதன். மயில். | | | | | |
| சாமம். | கோழி. எ. | மயில். ஒ. | வல்லூறு. அ. | ஆந்தை. இ | காகம். உ. |
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ |
| 2. | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 |
| 4. | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ |
| 5. | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ |

## பூர்வபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

### விடியாமம்.

அதிகாரப்பக்ஷி — மயில்.

படுபக்ஷி—வல்லூறு.

| சாமம். | மயில். ஒ. | வல்லூறு. அ. | ஆந்தை. இ. | காகம். உ. | கோழி. எ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ |
| 2. | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 |
| 4. | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ |
| 5 | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ |

## பூர்வபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

வெள்ளி.

அதிகாரப்பக்ஷி — வல்லூறு.

படுபக்ஷி—ஆந்தை.

| சாமம். | வல்லூறு. அ. | ஆந்தை. இ. | காகம். உ. | கோழி. எ. | மயில். ஒ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ |
| 2. | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 |
| 4 | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ |
| 5 | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ |

## பூர்வபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

சனிக்கிழமை.

அதிகாரப்பக்ஷி — ஆந்தை.

படுபக்ஷி—வல்லூறு.

| சாமம். | ஆந்தை. இ | காகம். உ. | கோழி. எ. | மயில். ஒ. | வல்லூறு. அ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ |
| 2. | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ |
| 3. | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 |
| 4. | நடை $1\frac{1}{2}$ | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ |
| 5. | துயில் $\frac{3}{4}$ | ஊண் $1\frac{1}{4}$ | அரசு 2 | சாவு $\frac{1}{2}$ | நடை $1\frac{1}{2}$ |

## பூர்வபக்ஷம் பகல் இரவு இரண்டிற்கும் படுபக்ஷிகள்.

☞ இத்த செய்யுள் முன்னிருக்கும் தொழில் சக்கரங்களில் எழுதியிருக்கும் படுபக்ஷிகளுக்குச் சரியாயிருக்கும்.

வாரங்கள் 7-க்கும் படுபக்ஷிகள்.

அருக்கன்வெள்ளிமுனிமரணம் அணிசேர்செம்பொற்காரியுட
னெருக்கும்வல்லூறேமரணம் நெறியாங்காகமதிமரணஞ்
செருக்குஞ்செவ்வாய்கோழியதாஞ் சேர்ந்தபுந்திமயில்மரணங்
கருக்குங்குழலாய்முற்பக்கங் கடிகையறுபான்சாவாமே. (21)

### தன்னுடையபக்ஷி இன்னதென்பதையறிய.

அனேகர் நக்ஷத்திரப் பக்ஷியைத் தங்களுடையபக்ஷி என்கிறார்கள். இது தப்பு சரிவராது. அடியிற்குறித்தபிரகாரம் பக்ஷி இன்னதென்று அறியவும்.

### (உதாரணம்.)

பூர்வபக்ஷம் வியாழம் பகல் - 3-மணிக்கு ஜெனனமானவனுக்கு பக்ஷி என்ன?

பூர்வபக்ஷம் வியாழக்கிழமை பகல் 3 - மணிக்கு 4 - ம் ஜாமம் ஷை 4-ம்-ஜாமத்தில் செல்லுமணி-1. நிமி-48. அல்லது நாழிகை-$4\frac{1}{2}$- இதை சக்கரம் 3-ல்-பார்க்கவும். அந்த சக்கரத்தில் 4 - ம்-ஜாமத்தை வரிசைக்கிரமமாய் ஷை $4\frac{1}{2}$ - நாழிகைக்குப் பார்க்கவும். அதாவது ஷை சக்கரத்தில் 4-ம் - ஜாமத்தில் தூக்கம்-$\frac{3}{4}$, மரணம்-$\frac{1}{2}$, உண்டி-$1\frac{1}{4}$, நடை-$1\frac{1}{2}$, அரசு-2, ஆகமொத்தம் கூட்ட அரசு தவிர மொத்தநாழிகை நடைவரையில்-4 ஷை 4-ம்-ஜாமத்தில் செல்லு நாழிகை $4\frac{1}{2}$-க்கு நடைவரையில்-4 - போக இருப்புநாழிகை அரைக்கு அரசுஜெனனமாகிறது. அந்த அரசுவீட்டில் நேர்மேலேபார்த்தால் பக்ஷி ஆந்தை இருக்கும் ஆதலால் ஷை ஜாதகன்பக்ஷி ஆந்தை அரசுகாலத்தில் ஜனனம். அந்த அரசிலும் அந்தரம்பார்த்தால் ஷை $4\frac{1}{2}$-நாழிகைக்கு அரசில் அரசு-2-அரசில் தூக்கம்-$\frac{3}{4}$. அரசில் சாவு-$\frac{1}{2}$. அரசில் உண்டி-$\frac{1}{4}$. ஆக நாழிகை $4\frac{1}{2}$-க்கு ஷை ஜாதகன் ஆந்தை அரசு காலத்தில் ஊண் அந்தரத்தில் ஜனனம், இப்படியே பூர்வபக்ஷம் பகல் பூர்வபக்ஷம் இரவு அமரபக்ஷம் பகல் அமரபக்ஷம் இரவு ஆகிய யெல்லாக் காலங்களுக்கும் அவரவர்கள் ஜனனபக்ஷி அறியவும். இப்படி பக்ஷி தெரிந்துக்கொண்டு ஷை பக்ஷி சத்துருமித்துரு ஷை ஜனனகாலத்தில் என்னநிலையில் இருந்ததென்பதையறிந்து பின்னுல்வரும்ஜாதககாண்டத்தில் பார்க்க ஷை ஜாதகன் ஆயுள்நடக்கும் பலன்கள் சுகாசுகம் நன்றாய்த் தெரியும்.

### பூர்வபக்ஷம்-நிறப்பக்ஷி.

வல்லூறுபொன்னிறமாம் வளராந்தைவெண்மையதாம்
சொல்லாருங்காகஞ் சிவப்பாகும்—நல்லாய்கேள்
கோழியுருப்பச்சை குளிர்ந்தமயில்கருப்பாம்
நாழிகைமணக்க நவில்.

### பூர்வபக்ஷம்-ஜாதிப்பக்ஷி.

வல்லூருபாப்பான் வளராந்தைதான்வணிகன்
செலலாருங்காகம் ஜெகத்தாசன்—நல்லாய்கேள்
கோழியதுவேளாளன் கூறுமயில்சண்டாளன்
ஆழியான்நூலாய்ந் தறி.

(இ-ள்.) வல்லூறு பிராமணனுக்கும், ஆந்தை வாணியனுக்கும், வியாபாரம் செய்யும்படியான சகலருக்கும், காகம் அரசனுக்கும், க்ஷத்திரியர், பொந்திலியர், மராட்டியருக்கும், கோழியானது வேளாளருக்கும், பயிர்தொழில் செய்பவருக்கும், தொண்டமண்டலத்து தமிழர்களுக்கும், மயில்சண்டாளரென்னும் பறையர்கள் துலுக்கர்கள் லப்பைகள் முதலியோருக்கும் உரித்தாகும்.

### பூர்வபக்ஷம்-பூதப்பக்ஷி.

வல்லூறுதேயுவாம் வல்லாந்தைவாயுவாம்
பொல்லாக்கருங்காகம் பூமியதாம்—நல்லாய்கேள்
நீராகும்கோழி நீலமயிலாகாயம்
காரார்குழலாய்க் கனி.

### பூர்வபக்ஷம்-திசைப்பக்ஷி.

உரைகிழக்குவல்லூறு உயராந்தைதெற்காம்
விரையக்கருங்காகம் மேற்காகும்—புரைதீரக்
கொத்தியிரைவிழுங்குங் கோழிவடக்காகும்
மத்திபத்தில்நிற்கும் மயில்.

### பூர்வபக்ஷம்-பக்ஷிகள்.

பிரதமை, சஷ்டி, ஏகாதசி, வல்லூறு. துதிகை, சப்தமி, துவாதசி, ஆந்தை. திரிதிகை, அஷ்டமி, திரியோதசி, காகம். சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, கோழி. பஞ்சமி, தசமி, பௌர்ணமி, மயிலாகும்.

### பூர்வபக்ஷம்-ராசிப்பக்ஷி.

மேஷம், சிங்கம், விருச்சிகம், வல்லூறு. மிதுனம், கடகம், கன்னி, ஆந்தை. தனுசு, மீனம், காகம், ரிஷபம், துலாம், கோழி. மகரம், கும்பம், மயில் ஆகும்.

## பூர்வபக்ஷம் பகல் தொழில்.

| அ. | இ. | உ. | எ. | ஒ. |
|---|---|---|---|---|
| வல்லூறு. | ஆந்தை. | காகம். | கோழி. | மயில். |

| பக்ஷிகள். | 1—ம் ஜாமம் | 2—ம் ஜாமம் | 3—ம் ஜாமம் | 4—ம் ஜாமம் | 5—ம் ஜாமம் |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு. செவ்வா. | | | | | |
| வல்லூறு | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு |
| ஆந்தை | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் |
| காகம் | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை |
| கோழி | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு |
| மயில் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் |
| திங்கள். புதன். | | | | | |
| ஆந்தை | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு |
| காகம் | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் |
| கோழி | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை |
| மயில் | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு |
| வல்லூறு | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் |
| வியாழம். | | | | | |
| காகம் | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு |
| கோழி | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் |
| மயில் | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை |
| வல்லூறு | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு |
| ஆந்தை | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் |
| வெள்ளி. | | | | | |
| கோழி | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு |
| மயில் | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் |
| வல்லூறு | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை |
| ஆந்தை | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு |
| காகம் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் |
| சனி. | | | | | |
| மயில் | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு |
| வல்லூறு | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் |
| ஆந்தை | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை |
| காகம் | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு |
| கோழி | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் |

## பூர்வபக்ஷம் இரவு தொழில்.

| அ. | இ. | உ. | எ. | ஒ. |
|---|---|---|---|---|
| வல்லூறு. | ஆந்தை. | காகம். | கோழி. | மயில். |

| பக்ஷிகள். | 1—ம் ஜாமம் | 2—ம் ஜாமம் | 3—ம் ஜாமம் | 4—ம் ஜாமம் | 5—ம் ஜாமம் |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு. | | | செவ்வாய். | | |
| காகம் | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| கோழி | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| மயில் | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| வல்லூறு | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| ஆந்தை | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| திங்கள். | | | புதன். | | |
| கோழி | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| மயில் | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| வல்லூறு | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| ஆந்தை | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| காகம் | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| வியாழம். | | | | | |
| மயில் | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| வல்லூறு | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| ஆந்தை | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| காகம் | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| கோழி | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| வெள்ளி. | | | | | |
| வல்லூறு | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| ஆந்தை | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| காகம் | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| கோழி | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| மயில் | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| சனி. | | | | | |
| ஆந்தை | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| காகம் | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| கோழி | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| மயில் | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| வல்லூறு | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |

# ௩-ம். அதிகாரம்.

## பூர்வபக்ஷம்.

## பக்ஷியின் தொழில்பலன்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

### உண்டியின் பலன்.

போஜனமாகில்பதிவாழும் போனார்மீள்வார்போங்கவலை
காசினிவாழுமழைபொழியுங் களவுமில்லைக்கதிர்விளையும்
பேசில்கன்னிப்பேறுகும் பிணியுந்தீரும்பெண்பெருவள்
வாசிசெழும்பொன்வாணிபமா மன்னரைவெல்வாய்மாங்குயிலே.

(இ-ள்.) பக்ஷியானது உண்ணுங்காலத்தில், குடிவாழும், பிரயாணம்போனவர்கள் சுகமாய் வந்துசேர்வார்கள், கவலையெல்லாம் தீர்ந்துவிடும், மழைபொழியும், களவுமுதலியது கிடையாது, பயிர்நன்றாய் விளையும், பெண்பேசில் படியும், வியாதிதீரும், பெண்பிரசவிப்பாள், வர்த்தகம் செழிக்கும், எல்லாரையும் வெல்லலாம் என்றவாறு.

### குறிப்பு.

ஷை பலன் பக்ஷியின் மொத்தஉண்டி காலத்திற்கு சொன்னார் ஆனால் அதில் அந்தரபலன் பார்க்குமிடத்து உண்டிகாலத்தில்உண்டி அந்தரமாகில் ஷை பலன் தடையின்றி நடக்கும். ஊணில் நடையந்தரமாகில் மத்திபம். ஊணில் அரசு அந்தரமாகில் விசேஷபலன் ஊணில் துயில் சாவுமுதலியதாகில் ஷை பலன் மத்திபமாகும்.

### (2) நடையின் பலன்.

யாத்திரையாகில்நிலைகுலையு மொன்னார்வெல்வாரிருநிதிபோல்
காத்திரவில்லாக்கதிவிளையுங் கன்னியர்வாழ்க்கைநன்றுகா
மனத்திரள்சொல்லும்பொருள்கூடா வேட்கைதவந்துமணங்கூடா
சூத்திரஞ்சொன்னபடியாலே சொன்னார்பெரியோர்சுரிகுழலே.

(இ-ள்.) பக்ஷி நடைகாலத்தில் யாத்திரைபோனால் கஷ்டம்வரும், அன்னியர்கள்வெல்வர், பணமும்போய்விடும், ஈனமானபெயருண்டாகும், பெண்பேசில்கூடாது, மனதில்கொண்டயெண்ணம் நிறைவேறாது, விவாகம்நடவாது என்றவாறு.

## குறிப்பு.

பூர்வபக்ஷத்தில் மாத்திரம் நடைக்கு கெட்டபலன் அமரபக்ஷத்தில் சுபபலனுகநடக்கும்.

## (3) அரசின் பலன்.

அரசேசெய்யிற்புவிபோ மரசராலேபலனெய்து
முரசுமதிரும்வரிசையுடன் மூண்டகருமந்தான்விளங்கும்
பரிசும்பெரியோர்திரவிடுவர் பழையபிணிபோம்பயமில்லை
புரைபோங்களவுந்தான்காணு போக்குமில்லைபுரிகுழலே.

(இ-ள்.) பக்ஷி அரசாகில் உலகப்புகழ்ச்சி புண்டாகும் அரசராலே பலன்கிடைக்கும் நல்லவாத்தியங்களுடன் சுபமங்கள் வரிசை வரும் மனக்கவலை நீங்கிவிடும். பெரியோர்களால் நல்லவெகுமதி கிடைக்கும் தீராதவியாதியெல்லாம் தீர்ந்துவிடும். பயம்கிடையாது களவுமுதலி யவை ஏற்படாது என்றறியவும்.

## குறிப்பு.

ஷ பலன் அரசிற்கு பொதுவானாலும் அரசில் நடை துயில் சாவுமுதலிய அந்தரங்களில் மத்திபபலனாகும்.

## (4) நித்திரையின் பலன்.

தூங்குமாகில்நோய்மாருத் தூரம்போனூர்தாம்மீளார்
ஆங்கேகருமம்நன்ருக அரிவைவாழ்க்கைத்தாழ்வாகும்
தீங்கேயல்லால்மழைபொழியாச் செந்நெல்விளையாச் செய்குறியில்
ஓங்குமனமுந்தாராதே உண்மையாகவுரைத்தோமே.

(இ-ள்.) பக்ஷி தூங்குமாகில் வியாதி தீராது, தூரம்போனவர்கள் திரும்பிவரமாட்டார்கள். நாமெடுத்தக்காரிய மொன்றும் முடியாது கெடுதியேகாணும், மழைபொழியாது, பயிர்நன்ருய்விளையாது, நாம் யாதொருகாரியம் செய்ய மனம்வராதென்றறியவும்.

## (5) மரண பலன்.

துஞ்சுமாகிற்சாவுசொல்லுந் தலையாப்பிணியுந்தானெய்தும்
நெஞ்சில்நினைத்தபொருள்கூடா நிதியுங்காணூர்நிலைகுலைவார்
வஞ்சர்நோயுமிகவுண்டா மனையாள்வெருக்கில்வுறவாகாள்
கஞ்சமலராற்குழலாளே கருத்தாயுரைத்தபடியறியே.

(இ-ள்.) பக்ஷி மரணகாலத்தில், மரணமுண்டாகும். தீராப்பிணி யுண்டாகும், நினைத்தது ஒன்றும் முடியாது திரவியம் முதலியது கிடைக்காது நிலைகுலைந்து விடும் சத்துருக்கள் துன்பம் யேற்படும் மனைவி வெறுப்பாளானல் மறுபடியும் உறவாகவே மாட்டாளென் றறியவும்.

## ௪-ம். அதிகாரம்,

### அமரபக்ஷம் அல்லது தேய்பிறை.

### அக்ஷரப்பக்ஷி.

இகரம்வல்லூறு ஆந்தைஉகரமதாம்
ஒகாமுயிர்காகம்—உன்னிப்பகரில்
அகரமதுகோழி ஆங்காருமஞ்சை
எகரமதுவாகு மெமக்கு.

(இ-ள்.) இ. உ. ஒ. அ. எ.
வல்லூறு. ஆந்தை. காகம். கோழி. மயில்.

இதுவும் முன்பூர்வ பக்ஷத்தில் காட்டியதுபோல இனவெழுத்துக்களையும் தழுவும். இருபக்ஷத்திலும் அக்ஷரம் மாத்திரம் மாரும் பக்ஷிகள் மாராது பூர்வபக்ஷத்தில் ஒருவன் ஜெனனமானான். அப்போது அவன் பக்ஷி வல்லூறுயிருந்தால் அதுவே அமரபக்ஷத்தில் கோழியாய்விடாது. இதையறியவும். இன்னும் ஒருவன்பூர்வபக்ஷத்தில் "ராமசாமி வருவானு"வென்று ஒரு ஆரூடம் கேட்டால் அப்போது அந்த ரகாசப்தத்திற்கு பக்ஷியானது வல்லூறு. அதே ஆரூடம் அமரபக்ஷத்தில் கேட்டால் அப்போது ரகாசப்தத்திற்கு பக்ஷி கோழி அப்போது கோழியின் தொழிலைக்கொண்டு பலன் சொல்ல வேண்டும் மற்றதும் இம்மாதிரிதான்.

### அமரபக்ஷம் பகல்.

வாரங்கள் 7-க்கும் ஊண் அல்லது அதிகாரப்பக்ஷி.

நேரிசை-வெண்பா.

திங்கட்சனிமயிலாஞ் சேயருக்கன்கோழியதாம்
பொங்குபுதன்காகம் போசனமா—மங்கையே
அந்தணனுக்காந்தை யணிபுகர்க்குவல்லூறு
சந்ததமும்பிற்பகற்கே சாற்று.

(இ-ள்.) திங்கள் சனி இருவாரமும் பகல்முழுதும் மயிலின் அதிகாரம் அதிலும் மேல்படி இருவாரங்களின் முதல் ஜாமத்தில் மயில் உண்ணும்.

செவ்வா ஞாயிறு இருவாரமும் பகல்முழுதும் கோழின் அதிகாரம் அதிலும் மேல்படி இருவாரங்களின் முதல் ஜாமத்தில் கோழி உண்ணும்.

புதன்கிழமை பகல் முழுதும் காகத்தின் அதிகாரம் அதிலும் முதல்ஜாமத்தில் காகம் உண்ணும்.

வியாழம் பகல்முழுதும் ஆந்தையின் அதிகாரம் அதிலும்முதல் ஜாமத்தில் ஆந்தை உண்ணும்.

வெள்ளி பகல்முழுதும் வல்லூரின் அதிகாரம் அதிலும் முதல் ஜாமத்தில் வல்லூருண்ணும்.

இப்படி ஒருஜாமத்தில் ஒருபக்ஷி உண்டியிலிருந்தால் அதற்கடுத்தஜாமத்தில்சாகும். அதற்கடுத்தஜாமத்தில்தூங்கும். அதற்கடுத்த ஜாமத்தில் அரசாகும். அதற்கடுத்த ஜாமத்தில் நடக்கும். இது பகலுக்கு மாத்திரம் இரவிற்கு முதல் ஜாமத்தில் உண்டபக்ஷி இரண்டாம் ஜாமத்தில் தூங்கும். மூன்றாம் ஜாமத்தில் நடக்கும். நான்காம் ஜாமத்தில் செத்து ஐந்தாம்ஜாமத்தில் அரசுசெய்யும்.

## அமரபக்ஷம் பகல் இரவுபக்ஷிகளின் செய்கை.

### அமரபக்ஷம் பகல்.

அக்ஷரம்-5-பக்ஷி-5, ஜாமம்-5-க்கும் தொழில்விவரம்.

### முதல்சாமத்திற்கு மாத்திரம்.

திங்கள்—சனி.

பூர்வபக்ஷம்பகல் சனிக்கிழமையின் கவியே இதற்குமாம்.

செவ்வா—ஞாயிறு.

பூர்வபக்ஷம்பகல் வெள்ளிக்கிழமையின்கவியே இதற்குமாம்.

புதன்.

பூர்வபக்ஷம்பகல் வியாழக்கிழமையின்கவியே இதற்குமாம்.

வியாழம்.

பூர்வபக்ஷம்பகல் திங்கள்புதன்கவியே இதற்குமாம்.

## வெள்ளி.

பூர்வபக்ஷம் செவ்வா ஞாயிறு கவியே இதற்குமாம்.

## அந்தர விவரம்.

முற்கூறிய பூர்வபக்ஷத்துக் கணக்குப்பிரகாரந்தான் இதற்கும் 5. ஜாமம். ஷ ஜாமம் 1-க்கு நாழிகை 6. ஆனால் இதில் அந்தரகணக்கு மாத்திரம் வேறுபடும்.

### அமரபக்ஷம்-பகல்.

ஊண்கடிகைரெண்டாகும் ஒத்தநடைஒன்றரையாம்
ஆணின்அரசுமுக்கால் ஆனதே—வீணின்
உறக்கமரைநாழி உயிர்போக்கொன்றேகால்
பறக்கும் பிற்பக்கம் பகல்.

## ஷ செய்யுளின் விவரம்.

| | | |
|---|---|---|
| ஊண் அந்தரத்திற்கு நாழிகை | | 2 |
| நடை | ,, | $1\frac{1}{2}$ |
| அரசு | ,, | $\frac{3}{4}$ |
| துயில் | ,, | $\frac{1}{2}$ |
| மரணம் | ,, | $1\frac{1}{4}$ |

ஆகமொத்தம் நாழிகை 6. இது அமரபக்ஷம் பகலுக்கு மாத்திரம்.

ஊண் நாழிகை-6-ல், ஊணில் ஊண்-2. ஊணில்சாவு $1\frac{1}{4}$, ஊணில் துயில் - $\frac{1}{2}$, ஊணில் அரசு-$\frac{3}{4}$, ஊணில் நடை - $1\frac{1}{2}$, ஆகமாறும். பூர்வபக்ஷம் மாறலுக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்திற்காக இவ்விடம் எழுதலாயிற்று.

## அமரபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

திங்கள்—சனி.

அதிகாரப்பக்ஷி — மயில்.

படுபக்ஷி { திங்கள்—ஆந்தை. சனி—கோழி.

| சாமம். | மயில். எ. | கோழி. அ. | காகம். ஒ. | ஆந்தை. உ. | வல்லூறு. இ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 2. | சாவு $1\frac{3}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 |
| 3. | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ |
| 4. | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ |
| 5. | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ |

## அமரபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

செவ்வா—ஞாயிறு.

| அதிகாரப்பக்ஷி — கோழி. படுபக்ஷி { செவ்வா—வல்லூறு. ஞாயிறு—காகம். | | | | | |
|---|---|---|---|---|---|
| சாமம் | கோழி. அ. | காகம். ஒ | ஆந்தை உ. | வல்லூறு. இ. | மயில். எ. |
| 1. | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 2. | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 |
| 3. | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ |
| 4. | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ |
| 5. | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ |

## அமரபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

புதன்.

| அதிகாரப்பக்ஷி — காகம். படுபக்ஷி—மயில். | | | | | |
|---|---|---|---|---|---|
| சாமம். | காகம். ஒ. | ஆந்தை. உ. | வல்லூறு. இ. | மயில். எ. | கோழி. அ. |
| 1. | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 2. | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 |
| 3. | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ |
| 4. | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ |
| 5. | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ |

# அமரபக்ஷம் பகல் தொழில்முறைச்சக்கரம்.

## வியாழம்.

அதிகாரப்பக்ஷி — ஆந்தை.

படுபக்ஷி—கோழி.

| சாமம். | ஆந்தை. உ. | வல்லூறு. இ. | மயில். எ. | கோழி. அ. | காகம். ஒ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 2. | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 |
| 3. | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ |
| 4. | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 3 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ |
| 5. | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ |

## அமரபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

### வெள்ளிக்கிழமை.

அதிகாரப்பக்ஷி — வல்லூறு.

படுபக்ஷி—மயில்.

| சாமம். | வல்லூறு. இ. | மயில். எ. | கோழி. அ. | காகம். ஒ. | ஆந்தை. உ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ |
| 2. | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 |
| 3. | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ |
| 4. | அரசு $\frac{3}{4}$ | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ |
| 5. | நடை $1\frac{1}{2}$ | ஊண் 2 | சாவு $1\frac{1}{4}$ | துயில் $\frac{1}{2}$ | அரசு $\frac{3}{4}$ |

# ௫-ம். அதிகாரம்.

## அமரபக்ஷம்-இரவு.

வாரங்கள் 7-க்கும் ஊண் அல்லது அதிகாரப்பக்ஷி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மந்தன்சோமன்கோழியினுண் மானேவெள்ளிமயிலுண்ணும்
புந்தியாந்தைபோசனமாம் பொன்னிற்காகம்பிறையருந்தும்
சிந்தைமகிழச்சேயிரவி தினத்தேவல்லூரமுதுசெய்யும்
மந்தித்தோன்றும்பிற்பக்கத் தடைவேசொன்னோமறிநன்றே.

அக்ஷரம்-5. பக்ஷி-5. ஜாமம்-5-க்கும் தொழில் விவரம்.

### முதல்ஜாமத்திற்கு மாத்திரம்.

திங்கள் சனி.

பூர்வபக்ஷம் இரவு திங்கள் புதன்கவியே இதற்குமாம்.

வியாழம்.

பூர்வபக்ஷம் இரவு ஞாயிறு செவ்வாகவியே இதற்குமாம்.

புதன்.

பூர்வபக்ஷம் இரவு சனியின்கவியே இதற்குமாம்.

ஞாயிறு செவ்வா.

பூர்வபக்ஷம் இரவு வெள்ளியின்கவியே இதற்குமாம்.

வெள்ளி.

பூர்வபக்ஷம் இரவு வியாழம்கவியே இதற்குமாம்.

### அந்தர விவரம்.

முற்கூறிய அமரபக்ஷம் பகல் அந்தரகணக்கைப்போல் அல்ல இரவிற்கு ஷை கணக்குமாறும்.

### அமரபக்ஷம்-இரவு.

ஊண்எழுகால்போக்கெழுகால் ஊராள்வதோமுக்கால்
மாணின்றுறங்கு மறுமுக்கால்—சேணின்று
சாகுமதுநாற்கால் ஆகுமாங்கந்து
ஏகும்பிற்பக்க மிறவில்.

### ஷை செய்யுளின் விவரம்.

| | | |
|---|---|---|
| ஊண் அந்தரத்திற்கு நாழிகை | | $1\frac{3}{4}$ |
| நடை | ,, | $1\frac{3}{4}$ |
| அரசு | ,, | $\frac{3}{4}$ |
| துயில் | ,, | $\frac{3}{4}$ |
| மரணம் | ,, | 1 |

அமரபக்ஷம் இரவில் ஊணில் ஊண், ஊணில் துயில், ஊணில் நடை, ஊணில் சாவு, ஊணில் அரசாக மாறும்.

## அமரபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

திங்கள்—சனி.

அதிகாரப்பக்ஷி—கோழி.

படுபக்ஷி { திங்கள் ஆந்தை. சனி கோழி.

| சாமம். | கோழி. அ. | காகம். ஒ. | ஆந்தை. உ. | வல்லூறு. இ. | மயில். எ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ |
| 2. | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ |
| 3. | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ |
| 4. | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ |
| 5 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 |

## அமரபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

ஞாயிறு—செவ்வா.

அதிகாரப்பக்ஷி — வல்லூறு.

படுபக்ஷி— { ஞாயிறு—காகம்.<br>செவ்வா—வல்லூறு.

| சாமம். | வல்லூறு. இ. | மயில். எ. | கோழி. அ. | காகம். ஒ. | ஆந்தை. உ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ |
| 2. | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ |
| 3. | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ |
| 4 | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ |
| 5 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 |

## அமரபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

புதன்.

அதிகாரப்பக்ஷி — ஆந்தை.

படுபக்ஷி—மயில்.

| சாமம். | ஆந்தை. உ. | வல்லூறு. இ. | மயில். எ. | கோழி. அ. | காகம். ஒ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ |
| 2. | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ |
| 3. | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ |
| 4. | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ |
| 5. | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 |

## அமரபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

### வியாழம்.

| அதிகாரப்பக்ஷி — காகம்.<br>படுபக்ஷி—கோழி. | | | | | |
|---|---|---|---|---|---|
| சாமம். | காகம். ஒ. | ஆந்தை. உ. | வல்லூறு. இ. | மயில். எ. | கோழி. அ. |
| 1. | ஊண் 1¾ | துயில் ¾ | நடை 1¾ | சாவு 1 | அரசு ¾ |
| 2. | துயில் ¾ | நடை 1¾ | சாவு 1 | அரசு ¾ | ஊண் 1¾ |
| 3. | நடை 1¾ | சாவு 1 | அரசு ¾ | ஊண் 1¾ | துயில் ¾ |
| 4. | சாவு 1 | அரசு ¾ | ஊண் 1¾ | துயில் ¾ | நடை 1¾ |
| 5. | அரசு ¾ | ஊண் 1¾ | துயில் ¾ | நடை 1¾ | சாவு 1. |

## அமரபக்ஷம் இரவு தொழில்முறைச் சக்கரம்.

### வெள்ளி.

அதிகாரப்பக்ஷி — மயில்.

படுபக்ஷி—மயில்.

| சாமம் | மயில். எ. | கோழி. அ. | காகம். ஒ | ஆந்தை. உ. | வல்லூறு. இ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ |
| 2. | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ |
| 3. | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ |
| 4. | சாவு 1 | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ |
| 5. | அரசு $\frac{3}{4}$ | ஊண் $1\frac{3}{4}$ | துயில் $\frac{3}{4}$ | நடை $1\frac{3}{4}$ | சாவு 1 |

## குறிப்பு.

அமரபக்ஷம் இரவில் வெள்ளி, சனி, செவ்வா, ஆகிய மூன்று வாரங்களில், அதிகாரப்பக்ஷியும் படுபக்ஷியும் ஒன்ருய்வருவதால்அத் தினங்களில் நன்மையும் தீமையும் இரண்டுஞ்செய்ய உதவாது.

பூர்வபக்ஷம் அமரபக்ஷம் தொழில்முறைகளை அடியில் கண்ட ஒரேசெய்யுளால் கவனித்துக் கொள்ளலாம்.

கதிர்செவ்வாய் வாசதேவா
காரியிர் கோவி லோடே
மதிதினம் வீடே சோலே
மன்னநாள் ஆரோ வீடு
புதனிட நீபே கூடி
புகருநாள் பேசா டாபோ,

ஷை செய்யுளை அடியிற்கூறியபடி நன்ருய் கவனித்துக் கொள்ளவும்.

| வாரம். | பூ-பகல். | பூ-இரவு. | அ-பகல். | அ-இரவு. |
|---|---|---|---|---|
| * கதிர்செவ்வா | வா | சு | தே | வா |
| † காரியிர் | கோ | வி | லோ | டே |
| ‡ மதிதினம் | வீ | டே | சோ | லே |
| § மன்னநாள் | ஆ | ரோ | வீ | டு |
| புதமிட | நீ | பே | கூ | டி |
| ¶ புகருநாள் | பே | சா | டா | போ |

| | |
|---|---|
| * கதிர்செவ்வா | ஞாயிறுசெவ்வா |
| † காரியிர் | சனிக்கிழமை |
| ‡ மதிதினம் | திங்கட்கிழமை |
| § மன்னநாள் | வியாழக்கிழமை |
| ¶ புகழுநாள் | வெள்ளிக்கிழமை |

மேற்கூறிய செய்யுள் அன்றன்றைய வாரங்களில் முதல்ஜாமத்தில் ஊண்பக்ஷியைத் தெரிவிக்கின்றது.

அதாவது:—

வாசதேவா யென்பதில் வாயென்னும் சப்தாக்ஷரப்பக்ஷி வல்லூறு, சு வென்னும் சப்தாக்ஷரப்பக்ஷி காகம், தேயென்னும் சப்தாக்ஷரப்பக்ஷி கோழி, வா என்னும் சப்தாக்ஷரப்பக்ஷி வல்லூறு, இதைப்போலவே மற்ற எழுத்துக்களின் சப்தாக்ஷரப்பக்ஷியை கவனிக்கவும். அதை ஊணுகவைத்து பக்ஷிகளின் செய்கைப்பிரகாரம் கணக்கிடவும். இதை பாடம் செய்துக்கொண்டால் புஸ்தகம் இல்லாமல் நினைக்கும்போது கவனித்துக்கொள்ள ஏதுவாகும்.

## அமரபக்ஷம் பகல் இரவு இரண்டிற்கும் படுபக்ஷிகள்.

ஊறிடுந்திங்களாந்தை குலவுசேய்வல்லூறுகும்
மீறிய அருக்கன்காகம் வெள்ளியும்புதனுமஞ்சை
யேறியேசனிவியாழங் கோழியாம்மியம்புங்காலை
யாறுபத்தாகுங்கன்னல் அதிற்சாகும்அமரபக்கம்.

## அமரபக்ஷம் திதிபக்ஷி.

பிரதமை, சஷ்டி, ஏகாதசி, மயில். துதிகை, சப்தமி, துவாதசி, கோழி. திரிதிகை, அஷ்டமி, திரயோதசி, காகம். சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, ஆந்தை. பஞ்சமி, தசமி, அமாவாசை, வல்லூறுகும்.

## அமரபக்ஷம் ராசிப்பக்ஷி.

மேஷம், விருச்சிகம், கோழி. ரிஷபம், துலாம், மீனம் வல்லூறு. மிதுனம், தனுசு, கும்பம், ஆந்தை. கடகம், மயில். சிங்கம், கன்னி, மகரம், காகம்.

## அமரபக்ஷம் நிறப்பக்ஷி.

ஆந்தைசிவப்பாம் அணிகாகம்பொன்னிறயாம்
வாய்ந்தபச்சைவண்ண மயிலாகும்—ஏந்திழையீர்
வெள்ளையாங்கோழி விளங்குவரிக்குப்பு
வல்லூறுக்கென்றேமதி.

## அமரபக்ஷம் ஜாதிப்பக்ஷி.

பொன்மறையோனும்வலியன் போராந்தைவேந்தனும்
துன்னுமொழிக்காகந் தலைவணிகன்—மன்னும்
உலகத்தோன்கோழியே ஓதுங்காண்மஞ்சை
இழிகுலத்தோனென்றே இசை.

## அமரபக்ஷம் பூதப்பக்ஷி.

அறியபுவிவல்லூறு அப்பாகுமாந்தை
கரியதொருகாகங் கனலாகும்—பெரியகால்
தானேசரிந்தெழுதுஞ் செஞ்சூட்டுவாரணந்தான்
வானே பகல மயில்.

## அமரபக்ஷம் திசைப்பக்ஷி.

பச்சைமயில்மேற்காகம் பாரில்வடக்காந்தையதாம்
மச்சுகிழக்காகும் வல்லூறு—மெச்சுநல்ல
தெற்காகுங்காகமது தேனார்விழிமடவாய்
பொற்கோழிமத்திபமாம் போற்று.

---

## அமரபக்ஷம் பகல் தொழில்.

அ. இ. உ. எ. ஒ.

கோழி. வல்லூறு. ஆந்தை. மயில். காகம்.

| திங்கள். சனி. | | | | | |
|---|---|---|---|---|---|
| பக்ஷிகள். | 1—ம் ஜாமம் | 2—ம் ஜாமம் | 3—ம் ஜாமம் | 4—ம் ஜாமம் | 5—ம் ஜாமம் |
| மயில் | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை |
| கோழி | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் |
| காகம் | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு |
| ஆந்தை | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் |
| வல்லூறு | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு |
| ஞாயிறு. செவ்வா. | | | | | |
| கோழி | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை |
| காகம் | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் |
| ஆந்தை | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு |
| வல்லூறு | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் |
| மயில் | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு |
| புதன். | | | | | |
| காகம் | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை |
| ஆந்தை | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் |
| வல்லூறு | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு |
| மயில் | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் |
| கோழி | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு |
| வியாழம். | | | | | |
| ஆந்தை | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை |
| வல்லூறு | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் |
| மயில் | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு |
| கோழி | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் |
| காகம் | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு |
| வெள்ளி. | | | | | |
| வல்லூறு | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை |
| மயில் | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் |
| கோழி | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு |
| காகம் | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் |
| ஆந்தை | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு |

## அமரபக்ஷம் இரவு தொழில்.

| அ. | இ. | உ. | எ. | ஒ. |
|---|---|---|---|---|
| கோழி. | வல்லூறு. | ஆந்தை. | மயில். | காகம். |

| பக்ஷிகள். | 1—ம் ஜாமம் | 2—ம் ஜாமம் | 3—ம் ஜாமம் | 4—ம் ஜாமம் | 5—ம் ஜாமம் |
|---|---|---|---|---|---|
| **திங்கள். சனி.** | | | | | |
| கோழி | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| காகம் | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| ஆந்தை | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| வல்லூறு | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| மயில் | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| **ஞாயிறு. செவ்வா.** | | | | | |
| வல்லூறு | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| மயில் | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| கோழி | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| காகம் | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| ஆந்தை | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| **புதன்.** | | | | | |
| ஆந்தை | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| வல்லூறு | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| மயில் | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| கோழி | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| காகம் | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| **வியாழம்.** | | | | | |
| காகம் | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| ஆந்தை | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| வல்லூறு | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| மயில் | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| கோழி | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| **வெள்ளி.** | | | | | |
| மயில் | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| கோழி | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| காகம் | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| ஆந்தை | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| வல்லூறு | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |

## சா - ம். அதிகாரம்,

### அமரபக்ஷம் பக்ஷிகளின் தொழிற்பலன்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

### (1) உண்டியின்பலன்.

கெடுதியுமுடனேகாணார் கிளையுடன்வாழ்வுபேரும்
கடுகியபிணியுந்தீருங் கலக்கமோசற்றுமில்லை
அடைமழைபெருகவுண்டா மகமேறநிற்குந்தன்மை
முடுகியபயணமில்லை மொழிந்தபின்னுண்ணுங்காலை.

(இ-ள்.) கெடுதிகாணாது, வாழ்வுபெருகும், பிணிதீரும்,கலக்கமொழியும், மழைபொழியும், யாத்திரைகிடையாது என்றறியவும்.

### (2) நடையின் பலன்.

வெற்றியுஞ்சுகமுமுண்டாம் வியாதியும்மாற்றும்பின்பு
பத்தியகருமந்தானும் பயமில்லையகமுந்தாழார்
உற்றதோர்கெடுதிகாணாருறுமழையுண்டுதூரத்
தற்றவர்வரவுங்கூடச் சொல்லும்பின்னடக்கந்தோன்றில்.

(இ-ள்.) வெற்றியுண்டாகும், சுகமுண்டு, வியாதிதீரும், பயமில்லை, கெடுதிமுதலியது கிடையாது, யாத்திரைபோனவர் திரும்பிவருவார் மழையுமுண்டு என்றவாறு.

### (3) அரசின் பலன்.

ஜெயமொடுசுகமுமுண்டு சிறந்ததோர்பயணந்தன்னில்
புயலிடுமழையுமற்பம் புவிதனிற்கலக்கமில்லை
இயல்பினால்பெறலாம்வெற்றி லாபமுநீடுமாகும்
பயம்விளையாதுநாளும் அரசதாம்பரவையாகில்.

(இ-ள்.) ஜெயமுண்டு, சுகமுண்டாகும், யாத்திரைபோனால் மழைகாற்று அற்பமாயுண்டாகும், கலக்கமில்லை எடுத்தகாரியங்கள் லாபங்கொடுக்கும், பயம்கிடையாது என்றவாறு.

## (4) துயிலின்பலன்.

உன்னுடற்பிணியுமல்லா லொருபிணியதிகமாகும்
மன்னினுமழையேயில்லை வைத்தனகெடுதிகாணுந்
துன்னியநெஞ்சிற்றோடந் தோன்றிடுங்கருமஞ்செய்யும்
புன்னியேயுதிக்கும்பக்ஷி பயனுடனுறங்குமாகில்.

(இ-ள்.) உன்சரீரத்தி லிருக்கும் வியாதியோடு மின்னொரு வியாதி யதிகமாகும், மழைபொழியாது, எடுத்தகாரியமெல்லாம் கெடுதியாக முடியும், நெஞ்சிற்கவலையேற்படும் என்றவாறு.

## (5) மரண பலன்.

காவலில்பயமுமுண்டு கலகமாங்கருமமெல்லாம்
தீவினைபடுமற்றன்றிச் செய்யுநல்வினைகளாகாச்
சாவினில்விழுந்தபக்ஷி தனித்துவந்துதிப்பதாலே
பூவினிற்சிறந்தமாதே புகன்றனர்புள்ளினூலே.

(இ-ள்.) காவலில் பயமுண்டாகும், கலகம்ஏற்படும், காரியங் கை கூடாது, எல்லாங் கெட்டதாகவே முடியும் என்றவாறு.

## குறிப்பு.

பக்ஷிகளின் தொழில்பலனைச் சொல்லும்போது சத்துரு மித்துரு பக்ஷிகளின் பலனையுங் காணவேணும். மித்துருபக்ஷி ஊண் அரசாகில் நல்லது சத்துருபக்ஷி ஊண் அரசாகில் கெட்டதாகும்.

# எ-ம். அதிகாரம்.

## பக்ஷம் இரண்டிற்கும் பொது.

## சத்துருமித்துரு பக்ஷிகள்.

### பகைப்பக்ஷி.

மயில்பகைவல்லூறாந்தை கோழிக்குமதுவேயாகும்
செயிற்பகைவலியற்காந்தை ஆந்தைக்குவலியன்றீயான்
இயற்றியவலியனல்லா லெல்லாம்வல்லூறினுக்கே
உயிற்பகையாகுமற்ற தொழிந்தவையுறவாமன்னே.

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) | மயிலுக்கும் கோழிக்கும் பகை | | வல்லூறு, ஆந்தை |
| | காகத்திற்கு | ,, | ஆந்தை |
| | ஆந்தைக்கு | ,, | காகம் |
| | வல்லூறுக்கு | ,, | ஆந்தை, கோழி, மயில் |

### உறவுபக்ஷி.

மயிலுறவுவல்லூறு வன்காக்கைகோழி
செயலாகவல்லூறுஞ் சேர்காகம்—அயல்விழியாய்
கோழியுறவுமயில் கொள்ளுமெனவுறைத்தார்
எழிநூல்வல்லோ ரிசைந்து.

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) | மயிலுக்கு | உறவு | கோழி, காகம் |
| | காகத்திற்கு | ,, | மயில், கோழி, வல்லூறு |
| | வல்லூறுக்கு | ,, | காகம் |
| | கோழிக்கு | ,, | மயில், காகம் |
| | ஆந்தைக்கு | ,, | கோழி, மயில், வல்லூறு |

### குறிப்பு.

பக்ஷிகளின் சத்துருமித்துரு, பூர்வபக்ஷம் அமரபக்ஷங்களுக்கு வெவ்வேறாக சிலநூல்களில் எழுதியிருந்தாலும் அது சரியாய் வாராமல் தவரிப்போகிற படியால், இதுவே சரியென்று நிச்சயிக்கப்பட்டது.

### நக்ஷத்திரப்பக்ஷி.

அசுவனி, பரணி, கார்த்திகை, ரோகணி, மிருகசீரிடக், வல்லூறு. திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம்,

ஆந்தை. உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், காகம். அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், கோழி. திருவோணம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, மயில்.

## தாதுமூலஜீவப்பக்ஷி.

வல்லூறுமூலம் வளராந்தைஜீவனும்
சல்லாபமாங்காகந் தாதுவாம்—பொல்லாத
கோழிமூலச்சீவன் கோலமயில்தாதுவொடு
வாழுமூலஞ்சொல் லிவை.

(இ-ள்.) வல்லூறு மூலம், ஆந்தை ஜீவன், காகம் தாது, கோழி { மூலம், ஜீவன் }, மயில் { தாது, மூலம் } — மூலமென்பது மரம் செடி கிழங்கு வேர் முதலியது. ஜீவனென்பது, உயிருள்ள ஜெந்துவைப் பற்றியது தாதுவென்பது வெள்ளி பொன் முதலிய லோகங்களைக் கூறியது. இதில் வல்லூறு, ஆந்தை, காகம், மூன்றும் தனித்துப்பேசும். கோழியும், மயிலும் மேற்கூறியபடிக்கு இருபொருளைக் குறிக்கும். அந்த இரண்டில் யெது வுண்மையென அறியவேண்டில் மேல்படி பக்ஷியின் சத்துருமித்துரு பக்ஷியில் எதுவலிவுள்ள பக்ஷியோ அதை யறிந்து ஒன்றை ஸ்திரப் படுத்தவும்.

## நிலம்பக்ஷி.

வல்லூறுமாலை வளராந்தைவன்குறிஞ்சி
நல்லாருங்காகம் நடுமதரம்—மெல்லியரே
வரிரணமேமுல்லை வளருமயில்நெய்தல்
ஆரணத்தோர் சொல்லா லறி.

## பஞ்சலோகப்பக்ஷி.

வல்லூறுபொன்னும் வளராந்தைவெள்ளியதாம்
நெல்லாறும்காக நிறஞ்செம்பாம்—பொல்லாத
கோழியதுவெங்கலமாங் கோலமயிலிரும்பாம்
வாழிமடவார் வகை.

## இனப்பக்ஷி.

வல்லூறுகாகம் மயில்மூன்றுமாணாகும்
நல்லதிறவுகோல் நாஞ்சொன்னோம்—பொல்லாத
ஆந்தைபொற்கோழி பெண்ணாகுமிதேதோழி
தேர்ந்தறிந்து சொல்லும் திறம்.

## ஐந்தெழுத்துச் சக்கரம்.

* ஈசானியங்கன்னி எதிர்வடக்கக்கினிமேல்
வாசாவாய்வோடேரியும் வார்கிழக்காய்—பேசரிய
அக்கினியிற்கன்னி யுளவாம்-ஆ-ஈ-ஊ-ஏ-ஒ
சக்கரமிதைந்தெழுத்துந் தான்.

## கோணப்பக்ஷி.

* இதுயோகசாதனேயோர் தவிர மற்றவர்களுக்கு விளங்காது.

* வல்லூறுநீள்வட்ட மாலாந்தையைங்கோணம்
அல்லாருங்காக மறுகோணம்—மெல்லிநல்லாய்
கோழியதுநாற்கோணம் கோலமயில்முக்கோணம்
ஊழியான் சொன்ன வுரை.

* இந்தப் பாட்டு வடிவத்தையும் பொருள்களேயும் அறிவதற்கு எழுதியது.

## சுவைப்பக்ஷி.

தித்திக்குமாந்தை சிருபுளிப்புக்கோழியதாம்
எத்துங்கருங்காக மினிதுவர்ப்பாம்—பத்தினக
வல்லூறுகாரு மயில்கைக்குமென்பறே
அல்லார்குழலா யறி.

## முடுகுபக்ஷி.

காகமுழுமுடுகு வல்லூறுமுக்காலாம்
ஆகமுறுமாந்தை யரைமுடுகாம் —வேகமுறும்
கோழியதுகால்முடுகு கோலமயிலரைக்கால்
வாழுமுடுகேறிந்து வை.

முடுகுவென்பது அதிகவேகமுள்ளபக்ஷி ஐந்து பக்ஷிகளிலும் காகம் அதிகவேகமானது. அதற்கடுத்தது வல்லூறு, அதற்கடுத்தது ஆந்தை, அதற்கடுத்தது கோழி, அதற்கடுத்தது மயில்.

## குறிப்பு.

நால்வர் ஒரேகாலத்தில் ஜெனனமானூர்கள். அல்லது நால்வரும் அவரவர்பக்ஷியின் அரசுகாலத்தில் ஜெனனமானூர்களென்று வைத்துக்கொள்வோம். அவர்கள் எல்லாம் ஒருவனைப்போலவே யோக பாவங்களே அனுபவிக்காமல் ஒருவர்க்கொருவர் மாறுபட்டிருப்பதற்குக்காரணம் என்னவெனில் முன்னுல்கூறி யிருப்பதைப்போல்

அந்தரக்காலவித்தியாசம் 1 பக்ஷிவித்தியாசம் 2 அதாவது A ஏ, பி B, சி C, டி D, இ E, என்னும் ஐவரும் அரசு காலத்திலேயே ஜெனனமானார்கள் ஆனால் அவரவர்களின்பக்ஷி வேறு A ஏ. என்பவன்பக்ஷிவல்லூறு. (B பி) என்பவன்பக்ஷிஆந்தை, (C சி) என்பவன் பக்ஷி காகம். (D டி) என்பவன்பக்ஷிகோழி. (E இ) என்பவன்பக்ஷி மயில். ஆனால் இவர்களில் (C சி) என்பவன் எல்லாரைக் காட்டிலும் அதிக யோகவானாயிருப்பான். ஏனெனில் அவன்பக்ஷி காகம் முழு முடுகினபக்ஷி யாகையால் அதற்கிரண்டாவது (ஏ A) (3) (B பி) (4) (டி D) (5) (இ E) இதிலும் அந்தரபலன் சத்துருமித்துருபலன் அறிந்துப் பார்க்கவேண்டும். இதை ஜாதககாண்டத்திற்கு கவனம் வைக்கவும்.

## வேறு - கவி.

மயிலுக்குமாற்றான் வலிதாந்தைக்கோழியாம்
இயல்வலிதாங்கோழி இரண்டிற்கும்—கயலாகும்
முன்வலிதுவல்லூறு நான்கினுக்குங்காக்கை
பின்வலிதாகுங்காண் பெயர்ந்து.

## குறிப்பு.

முற்கூறியது பறப்பதில்வலிவு சாதாரணமாய் பக்ஷிகளில் வலுவானது வல்லூறுக்கு ஆந்தைவலிவு, ஆந்தைக்கு காகம்வலிவு,காகத்திற்கு கோழிவலிவு, கோழிக்குமயில்வலிவு, இதுகளில் வல்லூறுஆந்தை காகம் மூன்றும் சுபகாரியங்களில் விசேஷவலுவைக் கொடுக்கும் கோழி மயில் இரண்டும் அசுபகாரியங்களில் விசேஷவலுவைக்கொடுக்குமென் றறியவும்.

## காலப்பக்ஷி.

ஆந்தைமயில்முக்கால மானதொருவாரணந்தான்
சேர்ந்தநிகழ்காலஞ் செப்பிடுமே—வாய்ந்ததொரு
வல்லூறுகாகம் வருங்காலம்காட்டுமே
நல்லோருரைத்த வகை.

(இ-ள்.) ஆந்தை மயில் சென்றகாலத்தின் பலனையும் கோழி நடக்கும் காலம் அல்லது தற்காலத்துப் பலனையும் வல்லூறு காகம் இனி நடக்கப்போகும் எதிர்காலப்பலனையும் பேசும்.

## வினைப்பக்ஷி.

வல்லூறுவருகின்றான் மாமறையோன் தூரவந்தான்
நெல்லிக்கருங்காகம் நிற்கின்றான்—மெல்லியளே

கோழியேமீண்டான் குலவுமயிலுமறை
நாழியிலேவருவான் நாடு.

(இ-ள்.) ஒருவன்வந்து இன்னான்வருவானாவென்று ஆரூடம்கேட்டால் அந்தபக்ஷி வல்லூறாகில் வந்துகொண்டிருக்கிறானென்றும், ஆந்தையாகில் அதிக தூரத்தில்வருகிறானென்றும், காகமாகில் அவ்விடத்திலேயே நிற்கிறானென்றும், கோழியாகில் இப்போதுதான் புறப்பட்டானென்றும், மயிலாகில் அரைநாழியில் வருவானென்றும்சொல்லவும். ஆனால் அந்தபக்ஷி அந்காலத்தில் என்னதொழிலிலிருப்பதென்பதை கவனித்து சொல்லவேண்டும்.

## கெடுதியறிய.

மண்ணவன்வல்லூராகின் மனிதர்கைப்பகுத்ததென்க
ஒண்ணியவாந்தையாகி லொண்டொடியெடுத்தாளென்க
உண்ணியகாகமாகி லொருவனேகொண்டானென்க
வண்ணமார்கோழியாணும் பூமியில்மயில்தான்பெண்ணே.

இது களவைக்கண்டுபிடிப்பதற்காக எழுதியது. இதோடுதானு மூலஜீவப்பக்ஷி கோணப்பக்ஷி முதலியதை அனுசரித்து பலன்சொல்லவேண்டும். சோரசிந்தனை சொல்லக்கூடாது.

## விரல்பக்ஷி.

மூட்டுவிரல்வல்லூறு முழுவிரலாமாந்தையது
நெட்டைவிரல்காகமாம்—நேரிழையீர்—காட்டாணி
மோதிரமாங்கோழி முன்சுண்டுதோகையதாம்
ஆதரவாய்சொன்னோ மறி.

## அவையவப்பக்ஷி.

செய்யதலைவல்லூறு சீரார்முதுகாந்தை
கையீட்டிக்காகமாங் கண்டாயே—மெய்குழலாய்
* நாபியாங்கோழி நலமான தாளிரண்டும்
தோகைமயிலென்றே சொலு.

## திசைப்பக்ஷி.

வல்லூறுபத்தாகும் வளராந்தைநூறாகும்
நல்லகருங்காகமது நவிலக்ஷம்—புல்லவே
கோழியது ஆயிரமாங் கூறமயிலொன்று
ஊழியான்சொன்ன உறை.

---

* நாபி என்பது தொப்புள்.

## கெடுவுபக்ஷி.

வல்லூறுகெடுவேவாவாரம் வளராந்தைதனக்குப்பக்ஷம்
நல்லதோர்காகத்திற்கு நன்றிடுவருடமென்று
புல்லவேகோழிக்கேதான் புகலொரு * திங்களென்றும்
சொல்லவேமயிலுக்கேதான் † சுயதியாமென்றுபேசே.

## நாணயப்பக்ஷி.

பேசவேவல்லூறுக்குப் புகலுவாய்அணாதானாகும்
பாசமாம்பணம்ஆந்தைக்கு பருங்காகம்விராகனாகும்
நேசமாம்கோழிரூபாய் நிலைமயில்துட்டாமென்றே
வாசமாய்நாணயங்கள் வரைந்தனர்பக்ஷிக்கேதான்.

## மனநிலைப்பக்ஷி.

தானெனவல்லூறுக்குத் தறித்திடுங்கெடுவேயாகும்
நானெனஆந்தைக்கேதான் நாள்செலுங்கொடுப்பான்காகம்
ஏனமாங்கோழிக்கேதான் ஏமாற்றலாகிற்கும்
ஊனமாம்மயிலுக்கேதான் ஒருநாளும்மீயானென்றே.

## பதார்த்தப்பக்ஷி.

என்னவேவல்லூர்மச்சம் எழிலுளஆந்தைக்கோழி
மன்னவேகாகம்ஆடு மறுவியகோழிபன்றி
பன்னியமயிலுந்தானும் பக்ஷிகள்வகையதாகும்
உன்னியபதார்த்தபக்ஷி ஒதினார்வுகந்துபாரே.

## உணவுப்பக்ஷி.

பார்க்கவேவல்லூறுக்குப் பலகாரந்தானுமாகும்
ஏர்க்கவேஆந்தைக்கூழாம் இயம்பிடுங்காகம்சாதம்
கோர்க்கவேகோழிக்கேதான் கூறிடும்நொய்யின்கஞ்சி
வேர்க்கவேமயிலுக்கேசொல் வெகுபசியுள்ளோனாமே.

## காய்கறிப்பக்ஷி.

ஆமெனும்வல்லூறுக்கு அறைந்திடும்தண்டுமாகும்
காமெனும்ஆந்தைக்கீரைக் காகமோகிழங்கதாகும்
போமெனகோழிகாய்கள் புகன்றிடும்மயிலும்பூவாம்
ஆமெனுங்காய்கறிக்கே அறைந்தனர்பக்ஷிதானே.

---

* திங்கள் என்பது மாசம்.

† சுயதி என்பது மண்டலம் சிலர்மாதமென்றும் சொல்லுவர்.

## ஒளிக்குமிடப்பக்ஷி.

கூறவேவல்லூறக்கு குறித்தது வெளியிலாகும்
சீறவேஆந்தைக்கேதான் செப்பிடுங்காட்டிலென்றே
காறவேகாகம்உள்வீட்டில் கழறுங்கோழிஅயல்வீடாம்
மீறவேமயில்தனக்கும் அறைகுவாய்காணுதென்றே.

## அளவுபக்ஷி.

காணவேவல்லூறக்குக் கண்டிடும்உழக்கதாகும்
பூணவேஆந்தைக்கேதான் புகலிருபடியேஆகும்
தோணவேகாகந்தானும் தொடுத்திடும்மரக்காலாகும்
வேண * வாரணம்படியாம் வெண்மயில்ஆழாக்கென்னே.

## இடைப்பக்ஷி.

என்னவேவல்லூறக்கு எழில்விராகனிடையதாகும்
பன்னவேபலந்தானுந்தை பகர்காகந்தனக்குவீசை
உன்னியகோழிக்குச்சேர் ஓழில் † மஞ்சைமணங்கதாகும்
மன்னிய இடைகள்பக்ஷி மகிழ்வுடன்கண்டுத்தேறே.

## வஸ்திரப்பக்ஷி.

வல்லூறுநார்மடியாம் வளராந்தைபட்டாகும்
சொல்லூறுங்கோழிக்குச் சரிகையதாம்—நல்லாய்கேள்
வாரணமுந்துணியாகும் வாழ்மயிலுக்காந்தை
பூரணமாய்க்கண்டு புகல்.

## கெடுவுதினப்பக்ஷி.

மன்னியவல்லூறைந்து மாகுமேஆந்தைரெண்டாம்
கன்னியகாகத்திற்கு காண்மூன்று—உன்னியதோர்
கோழியதுநான்காங் கூறுமயிலொன்றும்
வாழியெனவேகண் டுறைசெய்.

## ஆள்குறிபக்ஷி.

அறியவல்லூறுபெரியவனும் ஆந்தையதுயிளையவனும்
நெறியாகுங்காகமது நீண்டவனும்—குரியாய்கேள்
குள்ளனுங்கோழி கூறுமயிலேயிருவர்
கள்ளமில்லாதிப்பிலணைக் காண்.

---

* வாரணம் - கோழி.

† மஞ்சை - மயில்.

# அ-ம். அதிகாரம்.

## நேரிசை வெண்பா.

## பக்ஷிகணித இலக்கணம்.

வல்லூறு.

பேதையாம்வல்லூறு போகும்மூன்றரையும்
ஓதியஒன்றரையி லுண்டேகும்—மாதேகேள்
அஞ்சுமரையினி லொன்றுமேயரசுநிலைச்
செஞ்சொற்றுணிவாற் றெளி.

(இ-ள்.) வல்லூறு நாழிகை 6-க்கு: நித்திரை $1\frac{1}{2}$, போஜனம் $1\frac{1}{2}$, நடை $1\frac{1}{2}$, மரணம் $\frac{1}{2}$, அரசு 1.

ஆந்தை.

துணைப்பிறிந்துதேடுந் துணைச்செயல்ஒன்றரை
உணவறிந்தொன்றரையி லுண்ணும்—பிணியாலே
கூர்ந்துங்கலீராந்தற் கோறநொய்தென்பறே
ஆந்தைக்கரசி லரையாம்.

(இ-ள்.) ஆந்தைநாழிகை 6-க்கு: நடை $1\frac{1}{2}$, ஊண் $1\frac{1}{2}$, துயில் 2, மரணம் $\frac{1}{2}$, அரசு $\frac{1}{2}$.

காகம்.

துஞ்சும்போதொன்றரையாம் துய்யநடையிரண்டு
மிஞ்சியரசாளு மேலொன்று—வஞ்சியரே
சேர்க்கையேநீக்கச் சிறுபோசனமொன்றும்
காக்கைக்கேசொன்னர் கனி.

(இ-ள்.) காக்கை நாழிகை 6-க்கு: மரணம் $1\frac{1}{2}$, நடை 2, அரசு 1, உண்டி 1, தூக்கம் $\frac{1}{2}$.

கோழி.

குற்றமிலாஒன்றரையில் கோழிதுணைகூடும்
மற்றுமோரொன்றரையில் வாய்பேசும்—வெற்றி
யரசாளுமொன்று அழியுமோர்வொன்றி
நிறையாவதொன்றாய் நினை.

(இ-ள்.) கோழிநாழிகை 6-க்கு: நடை $1\frac{1}{2}$, ஊண் $1\frac{1}{2}$, அரசு 1, மரணம் 1, துயில் 1.

## மயில்.

எடுக்குங்கடிகை யிரண்டரையுமாக
நடக்குமரையிரண்டில் நல்லூண்—அடுக்கும்
அரசாளுமொன்றி லடனித்திரையொன்றில்
நரைசாவொன்றென்றே நவில்.

(இ-ள்.) மயில் நாழிகை 6-க்கு: நடை $2\frac{1}{2}$, உண்டி $\frac{1}{2}$, அரசு 1, தூக்கம் 1, சாவு 1.

ஷை தமிழ்கணக்குகளுக்கு இங்கிலீஷ் கணக்கு உ-2, கஉ-$1\frac{1}{2}$, க 1, ௨-$\frac{1}{2}$.

## குறிப்பு.

பக்ஷி அந்தரக்கணக்கு வேறாகவும் மேல்படி கணக்குவேறாகவும் இருக்கிறதென்று மயங்கவேண்டாம். முன் அந்தரகணக்கில் கூறியது சரியே ஆனால் இது என்னவெனில் ஷை தொழிலின் அளவை உணர்த்துகின்றது. அதாவது சாதாரண அந்தரத்தில் உண்டிக்கு நாழிகை $1\frac{1}{2}$, இதில் உண்டி $\frac{1}{2}$, என்பது யென்னவெனில், உண்டிநாழிகை $1\frac{1}{2}$, ஆனாலும் அதில்போஜனம் செய்கிறநேரம் $\frac{1}{2}$-நாழிகைதான் எப்படியெனில் ஒருவன் தன் தொழிலிலிருந்து 12-மணிக்கு சாப்பாட்டுக்குப் போனானென்றும், அவன் சாப்பிட்டு 2-மணிக்கு மறுபடியும் தொழிலுக்குத் திரும்புகிறானென்றும் வைத்துக்கொள்வோம். அக்காலத்தில் அவன்தொழில் செய்யும்படியான இடத்திற்குப்போய் பலானவன் எங்கேயென்று கேட்டால் அவன் சாப்பாட்டுக்குப் போனானென்று சொல்லுவார்கள். அதனால் அவன்சாப்பாட்டுக்காக விட்டகாலம் 2-மணிநேரம் அதுபோல்தான் முற்கூறிய அந்தரகணக்கு. ஆனால் அந்த 2-மணிநேரமுமா அவன் சாப்பிடப்போனான்? இல்லை. அவன் போகவும் வரவும் ஸ்நானபானம் செய்யவும் முதலியதுபோக அவன் போசனம் சாப்பிட்ட காலம் மாத்திரம் சுமார் $\frac{1}{2}$-மணிநேரம் இருக்கலாம். அதுபோலவே பக்ஷிக்கும் உண்டி நாழிகை-$1\frac{1}{2}$, என்றாலும் அதன் புசிப்புகாலம் மேற்கூறிய கணக்கின் பிரகாரமாகும். அரசுகூட அப்படிதான். அரசுகாலம் 2-நாழிகையானாலும் அரசன் தன் அலங்காரத்தோடு சிம்மாசனமேறி அரசாட்சிசெய்யும் காலம்தான் ராஜரீகம் அதுபோல் தான் மற்றகணக்கையும் கவனிக்கவும்.

# கூ-ம். அதிகாரம்,

## ஜாதகக்காண்டம்.

முன்னால் எழுதியபடி தன்னுடையபக்ஷியின்னதென்பதையறிந்து ஜனனமாகும்போது எந்தஅந்தரத்தில்ஜெனனமானானோ அந்த அந்திரநாழிகையை 60-ல் பெருக்கினால் மொத்தம் விநாடியாகும் அதை 5-ல் வகுக்க 5-ஜாமம்என்பதுபோல் 5-விநாடியாகும். அதில் 1-2-3-4-5-விநாடிகளில் யெந்தவிநாடியில் ஜெனனமானானோஅதற்கு அடியிற்கூறியபலனை அறியவும்.

### 1—ம். விநாடி.

#### ஊண்.

ஊணில் முதல் விநாடியில் ஜெனனமானால் சுகமாய் வாழ்வன் அவனுக்கு வயது 65. பிணி துன்பம் முதலியது இல்லாமல் ஆயுள் மட்டும் புகழோடுவாழ்வன்.

### 2—ம். விநாடி.

இரண்டாம் விநாடியில் ஜெனனமானால் சகல நன்மையும் உண்டாகும் பூமிசேரும் வயது 60. சகலசுகத்துடன் தந்தைதாயுடன்யாதொரு துன்பமுமில்லாமல் வாழ்வன்.

### 3—ம். விநாடி.

மூன்றும்விநாடியில் ஜெனனமானால் வயது 50. 15 வயது மட்டும் பிணிமுதலிய சங்கடம் சுகம் கொஞ்சம் அதிகசுகம் இருக்காது சுகமும் துக்கமும் சரியாயிருக்கும்.

### 4—ம். விநாடி.

நான்காம் விநாடியில் ஜெனனமானால் வயது 41. சுகம் கொஞ்சம் வேளைக்குசரியாய் போஜனங்கிடைக்காது.

### 5—ம். விநாடி.

ஐந்தாம் விநாடியில் ஜெனனமானால் வயது 37. நல்ல சினேகம் கூடும் ஆனால் பொருள்முதலியது கிடையாது மனசஞ்சலத்துடன் வாழ்வன்.

## நடை.

### 1—ம். விநாடி.

முதல் விநாடியில் ஜெனனமானால் வயது 50. அவன் பிறந்த நாள்முதல் சுகமில்லை 30-க்குமேல் சுவல்பசுகம் பிறர் உதவிகிடையாது எல்லாம் தன்னாலேயே நடத்தவேண்டும்.

### 2—ம். விநாடி.

இரண்டாம் விநாடியில்ஜெனனமானால் வயது 45. ஜீவஜெந்தை இம்சைசெய்வன் பொய்களவு வஞ்சம் முதலியது பொருந்தி யிருப்பன் எல்லோரும் சண்டாளரென்பர் துஷ்டப்பெயரெடுப்பன் எனக்கெதிரியில்லை யென்று கெர்வம்படைப்பன்.

### 3—ம். விநாடி.

மூன்றும் விநாடியில் ஜெனனமானால் வயது 37. அவன்வயதளவும் சுகமில்லை நல்லபோஜனமில்லை கொலை களவு செய்வன் வியாதியால் துன்பப்படுவன்.

### 4—ம். விநாடி.

நான்காம் விநாடியில் ஜெனனமானால் வயது 21. வயதளவும் கஷ்டப்படுவன் களவுமுதலியதி செய்வன் நல்லோரை தூஷிப்பன் சண்டாளன் ஒருவருக்கும் அஞ்சாமல் அன்னவஸ்திரத்திற்குங் கஷ்டப்படுவன்.

### 5—ம். விநாடி.

ஐந்தாம் விநாடியில் ஜெனனமானால் வயது 18. நினைவு தப்பி வெறிகொண்டுபேசுவன் பழியுடையவன் பிறர்க்குதவி செய்யமாட்டான் நல்லோருடன் சேர்மாட்டான் கசடன் நற்குணங்கள் இல்லாதவன்.

## அரசு.

### 1—ம். விநாடி.

முதல் விநாடியில் ஜெனனமானால் வயது 107. பால் பாக்கியம் தனம் சுற்றத்தார் சகலசுகம் உண்டாயிருப்பன் எல்லோரும் அஞ்சுவார்கள் ஸ்ரீகளெல்லாம் வலிதில்வருவார்கள் அதிகசுகமுள்ளவன்.

## 2—ம். விநாடி.

இரண்டாம் விநாடியில்ஜெனனமானால் வயது 95. எண்ணமுடியாத சுகபோகமுண்டாகும் அவன்வாழ்க்கையை சொல்லமுடியாது ஞானவான் இவன்தான் சரியானபுருஷனென்று உலகத்தார் சொல்லுவர் அவனுடையகீர்த்தியை சொல்லமுடியாது.

## 3—ம். விநாடி.

மூன்றும்விநாடியில் ஜெனனமானால் வயது 86. மதிக்கொணாத வாழ்வையுடையவன் அதிக ஸ்ரீலோலன் வெகுசுகமுள்ளவன் பிணியில்லாதவன் அஷ்டசித்துகளையும் பொருந்தியிருப்பன் ஞானவானும் அதிகபுகழுடனும் வாழ்வன்.

## 4—ம். விநாடி.

நான்காம்விநாடியில் ஜெனனமானால் வயது 78. தேன்போன்ற மொழியையுடையவன் சேகரங்களுள்ளவன் தீமைபொய்முதலியது கிடையாது நற்குணம்பொருந்தியிருப்பன் பெரியோர்கள்சாதுக்கள் முதலியவர்களுடன் சேர்ந்து வாழ்வன் கொடுமையான வர்களையும் வஞ்சகர்களையும் சேரமாட்டான்.

## 5—ம். விநாடி.

ஐந்தாம்விநாடியில் ஜெனனமானால் வயது 67. இவன்பெருமை சொல்லமுடியாது தாய் சுற்றத்தார் முதலியவர்களுடன்சேர்ந்துவாழ்வன் புதையல் எடுப்பன் மனமகிழ்ச்சியுடையவன்.

# துயில்.

## 1—ம். விநாடி.

முதல்விநாடியில் ஜெனனமானால் வயது 35. செல்வங் கிடையாது அதிகதுயரமுள்ளவன் பிணியுள்ளவன் சாவளவும் சஞ்சலத்தோடு வாழ்வன்.

## 2—ம். விநாடி.

இரண்டாம் விநாடியில் ஜெனனமானால் வயது 27. கன்னம் களவு கொலை முதலியதுசெய்வன் துஷ்டனென்று பெயரெடுத்துத் திரிவன் மனைவிவெறுப்பள் உலகம் அஞ்சும்.

### 3—ம். விநாடி.

மூன்றாம்விநாடியில் ஜெனனமானல் வயது 21. அதிக கஷ்டமடைவன் தாய்தந்தையரைபரிகொடுப்பன் கண்டோரெல்லாம்தூஷணிப்பர் அன்னிய தேசமெல்லாந் திரிந்து அவ்விடத்தில் தானேமறிப்பன்.

### 4—ம். விநாடி.

நான்காம்விநாடியில் ஜெனனமானல் வயது 13. இவன் குடும்பத்தாரெல்லாம் இவன் சாவளவுந் துன்பப்படுவர் அதிக வியாதியோடு துன்பப்பட்டு இறப்பன்.

### 5—ம். விநாடி.

ஐந்தாம் விநாடியில் ஜெனனமானல் வயது 9. சுகமில்லை பாலியத்தில் இறப்பன்.

## மரணம்.

### 1—ம். விநாடி.

முதல்விநாடியில் ஜெனனமானல் வயது 12. தாய் தந்தைசேதமாவர் பிணியுடன்வாழ்ந்து தனிமையாய் இறப்பன்.

### 2—ம். விநாடி.

இரண்டாம்விநாடியில் ஜெனனமானல்வயது 9 சாவளவுந்துன்பந்தான் வேறில்லை.

### 3—ம். விநாடி.

மூன்றும் விநாடியில் ஜெனனமானல் வயது 7. இதற்குப் பலனில்லை.

### 4—ம். விநாடி.

நான்காம் விநாடியில் ஜெனனமானல் வயது 1. இதற்கும் பலனில்லை.

### 5—ம். விநாடி.

ஐந்தாம்விநாடியில் ஜெனனமானல் வயது மாதம் 6. இதற்கும் பலனில்லை.

## குறிப்பு.

மரணகாலத்தில் குழந்தைபிறந்தால் அதிகநாள் பிழைத்திராது தவிர மேற்கூறிய ஆயுட்பிரமாணங்கள் தவராது. ஆனால் அவர்கள் ஜெனித்த காலவிநாடி எத்தனையோ அத்தனைக்கும் மேற்கூறியது அதில் செல்லக்கணக்கிட்டு ஆயுட்பாகத்தில்கழித்து ஸ்திரப்படுத்த வேண்டும். இதோடு சத்துரு மித்துரு பக்ஷியின் பலமுங் கூட்டியும் கழித்தும் பார்க்கவேண்டும். இதுகளையெல்லாம் பூர்த்தியாய் எழுத முடியாது. புத்திசாலிகள் தாங்களே கவனிக்க வேண்டியதுதான் பஞ்சபக்ஷி சோதிஷம் ஒருவனுக்குப் பூர்த்தியாகவும் சொல்லப்புகுந் தால் அதை சொல்லுகிறவனுக்கே ஏதாகிலும் கஷ்டம்வந்து நேரிடு கின்றது. அதுவுமல்லாமல் அப்படி சொல்லுவது துறவியா யிருக் கப்பட்டவனுக்கே தகும். இல்லா தர்மத்திலிருப்பவன் ஷ பலன் சொன்னால் அவனுக்கு ஏதாகிலும் பெரியகஷ்டம் சேர்ந்து விடுகின் றது. இது உண்மை. ஆதலால் ஜனங்களுக்கு வேண்டிய பொதுப் பலனை மாத்திரம் எழுதினேன். அதுவுமல்லாமல் இதற்கு சாபம் உண்டுஇன்னும் "விதிவேறுவடிவம்பின்புவேலனேவேலோவேவீர்" என்பதின் கருத்தை யறிந்தவர்களுக்குத்தான் இந்தபக்ஷிசாஸ்திரம் முற்றிலுந்தெரியும். ஆதலால் ஷ ஜாதகப்பலன் முற்றிலும் எழுத வில்லையென்பதை மன்னிக்கவும்.

# ௰-ம். அதிகாரம்.

## பிணிக்காண்டம்.

### பொது.

#### ஊண்காலம்பலன்.

தன்னுடையபக்ஷி ஊணுயிருக்கும்போது பிணிவந்தால் 15-நா ளில் தீரும். இதற்குசாந்தி விநாயகருக்கு அபிஷேகஞ்செய்து பிரா மணர்களுக்கு அன்னதானஞ்செய்து மருந்துசாப்பிடத்தீரும்.

#### நடைக்காலப்பலன்.

நடைக்காலத்தில் பிணிவந்தால் அதிக விசனமேற்படும். ஒரு மாதத்தில் தீரும். இதற்கு சாந்தி ஷண்முகர்க்கு அபிஷேகஞ் செ ய்து மங்கிலியஸ்திரீகளுக்கு அன்னதானஞ்செய்து மருந்து சாப்பிட த்தீரும்.

### அரசுக்காலப்பலன்.

அரசுக்காலத்தில் பிணிவந்தால் 8-நாளில் தீரும். இதற்குச் சாந்தி சிவனுக்கு அபிஷேகஞ்செய்து அரசமரம் சுத்தி மருந்து சாப்பிடத்தீரும்.

### துயில்காலப்பலன்.

துயில்காலத்தில் பிணிவந்தால் 3 - மாதத்தில் தீரும். தேகத்திற்கு அதிக உபத்திரவங்கொடுக்கும். காளிக்கு அபிஷேகஞ்செய்து அனுமாருக்கு பூஜைசெய்து மருந்துசாப்பிடத்தீரும்.

### மரணக்காலப்பலன்.

மரணத்தில் வியாதிவந்தால் தீருவது அதிககஷ்டம் 6 - மாதத்தில் தீரும். தேருமோ தேறாதோ வென்று சந்தேகம் ஏற்படும். இதற்கு சனிபகவானுக்குப் பூசைசெய்து மருந்துசாப்பிடவும்.

### குறிப்பு.

சத்துருமித்துரு பலன்தெரிந்து சொல்லவும். சத்துரு வலுத்தால் தீர்வதில்லை. மித்துருவலுவாகயிருந்தால் மேற்கூறிய கெடுவின் பிரகாரம் சாந்தமாகும். ஜாதககாண்டத்தில் கூறியபடியே இதற்கும் விநாடி பிறித்துப் பலன்பார்க்கவும். பக்ஷிவித்தை எப்போதும்பொய்யாகாது. கணக்கும் காலநேரமும் கவனித்துசொன்னால் சரியாயிருக்கும் ஷை இரண்டும் தவரினால் பக்ஷிதவரும்.

---

### ஊண் காலம்.

### 1—ம். விநாடி.

ஊண்கால முதல்விநாடியில் பிணிவந்தால் 4 - 5, நாளில் தீரும் இதற்கு ஐங்கரர்க்கு அபிஷேகம்செய்து மருந்துசாப்பிடத்தீரும்.

### 2—ம். விநாடி.

இரண்டாம் விநாடியில் பிணிவந்தால் 7 - நாளில் குணமாகும் இதற்கும் முன்போல் சாந்திசெய்யவும்.

### 3—ம். விநாடி.

மூன்றும்விநாடியில் பிணிவந்தால் 9 - நாளில் தீரும். நான்காம் விநாடியில் வந்தால் 13-நாளில் தீரும். ஐந்தாம் விநாடியில் வந்தால் 15-நாளில் தீரும்.

## நடைக்காலம்.

நடைக்காலம் முதல்விநாடியில் பிணிவந்தால் 10-நாளிலும் இரண்டாம்விநாடியில் வந்தால் 15 - நாளிலும், மூன்றும் விநாடியில்வந்தால் 20-நாளிலும், நான்காம்விநாடியில்வந்தால் 25 - நாளிலும், ஐந்தாம்விநாடியில் வந்தால் 1-மாதத்திலும் தீரும்.

## அரசின்காலம்.

அரசு முதல்விநாடியில் பிணிவந்தால் அதிகஉஷ்ணத்தால்ஜடமெல்லாம் கொதிப்பாகும் 3-நாளில் தீரும். இரண்டாம் விநாடியில் வந்தால் 5-நாளிலும், மூன்றும்விநாடியில் வந்தால் 8-நாளிலும்,நான்காம்விநாடியில் வந்தால் 10-நாளிலும் தீரும். அரசுகாலத்தில் பிணி வந்தால் உயிர்ச்சேதமாகாமல் குணமாகும்.

## துயில் காலம்.

துயில்காலம்முதல் விநாடியில் பிணிவந்தால் வாயுவினுல் வந்த வியாதியாகும் 8-நாளிலும், இரண்டாம் விநாடியில் வந்தால் 15 - நாளிலும், மூன்றும்விநாடியில்வந்தால் 20-நாளிலும், நான்காம் விநாடியில்வந்தால் 3-மாதத்திலும், ஐந்தாம் விநாடியில் வந்தால் 50 - நாளிலும்தீரும். இக்காலத்தில் பிணிவந்தால் உயிர்ச்சேதமும் ஆகும்.

## மரணக்காலம்.

மரணக்காலம் முதல்விநாடியில்பிணிவந்தால் 6-மாதத்தில்தீரும் சத்துருவலுவாயிருந்தால் 2-மாதத்தில்கொல்லும். இரண்டாம்விநாடியில்வந்தால் ஒருவருடத்திலும், மூன்றும்விநாடிமுதல் 5 - வரையிலும் வந்தால் மரணம் சம்பவிக்கும்.

## பிணிகால அளவு.

ஊணிற்குமாதம்-1. நடைக்குமாதம்-6. அரசிற்குபக்ஷம்-1. தூக்கத்திற்கு வருடம்-1. சாவிற்குவருஷம் 3-ஆகும்.

## பிணி நிவாரணம்.

### ஊண்காலசாந்தி.

சர்வகாலப்பிணிக்கும் விநாயகர் கலசம் நிருத்தவும். அதாவது வீட்டிலிருக்கும் விநாயகருக்கு அபிஷேகம்செய்து வெள்ளைமலர் சாத்தி தூபதீபங்கொடுத்து தேங்கா யுடைத்து ஓம்,ஸ்ரீம், ஹரிங், ரீம், சங், உங், ஐயும், கிலியும், கணபதி சர்வசாபமும் தோஷமும் மசிநசி யென்று 1008-உருவு ஜெபம் செய்யவும் (இதுசர்வகாலப் பிணிக்குமாம்) அந்தக்கணபதிக்குப் பக்கத்தில் ஒருபடி பச்சை நெல் பரப்பி அதன்மேல் அடியிலிருக்கும் சக்கரம்எழுதி புதுகுடம்வாங்கிஅதன் மேல் பச்சைநூல்சுத்தி அதற்குள் புதிதாய் ஜலம் கிணற்றி லிருந்து சேந்தி எங்கும்வைக்காமல் கொண்டுவந்து ஷை பாண்டத்தில்நிறைய விட்டு அதற்குள் மாயிலைக்கொத்துப்போட்டு அதன்மேல் தேங்காய் வைத்து அதற்கு புதிய ஆடையுடுத்தி ஷை கலசத்தை முன் யெழுதிய நெல்லின்மேல் வைத்து அதற்கு யெதிரில் இலைபோட்டு அவல் கடலை, பொரி, தேங்கா, வெல்லம், பச்சரிசி, பொங்கல், சாராயம் கள்ளு, கஞ்சா, மாஜீம், அபினி, கருவாடு, முதலியதும்வைத்துதேங் காயுடைத்து தூபதீபங்காட்டி ஷை தூபதீபங் காட்டும்போது ஷை விநாயகருக்கு இத்தூபம் தெரியாதபடி நடுவில்மறைப்பு திரைகட்டவும் ஓம், ஐயும், கிலியும், சவ்வும், அங், உங், சர்வபீடை, மசி,நசி,யென்று 1008-உருவு ஜெபம் செய்து பிறகு இரண்டு ஓமகுண்டம் வைத்து அதில் அரசு, முன்னை, தர்ப்பைமுதலிய சமித்துகள் போட்டு ஆவின்நெய்விட்டு ஓமம்வளர்த்தி ஷை கணபதி மந்திரம் 5000-ஜெபித்து பிறகு பூஜைமுடிந்தவுடன் ஷை சத்திகலசத்திலிருக்கும்நீரை அவன் சிரசின்மேல் தெளிக்கவும்.

### நெல்லின்மேல் எழுதசக்கரம்.




"இந்த சக்கரத்தில் நடுவி லிருக்கும் ஓங்காரத்திற்குள்-அம்-உம்-என்பதோடு சிவ - சிவ-என்பதும் ஷை சக்கரத்தின் 6-அறைகளிலும்மேல் அறையில் ஓ இடது பாகமாக ஒவ்வொன்றிலும்-சி-வ-ய-ந-ம - என்று எழுத்துக்கள் எழுதிக்கொள்ள வேண்டும்."

பின்பு வெள்ளித்தகட்டில் பின்னுலிருக்கும் உச்சாடன சக்கரம் எழுதி பூஜைசெய்து குலிசம்கட்டவும் சாந்தமாகும்.

## நடைக்காலசாந்தி.

நடைக்காலத்தில் பிணிவந்தால் முன்போல் விநாயகர் பூஜைசெய்து கலசபூஜையும் செய்து ஓமகுண்டம் இரண்டும் வைத்து அரசு வன்னி, நாயுருவி, விளா, கருங்காலி, தர்ப்பை முதலிய சமித்திட்டு ஆவின்னெய்யும் இலுப்பை நெய்யுங்கூட்டி ஓமம் வளர்த்தி, நெற்பொரி, கடலை, மொச்சை முதலியது மேல்படி ஓமம்யெரியும்போது போட்டு ஓம், ஸ்ரீம், ரீம், அங், உங், ஐயும், கிலியும், கணபதி, சர்வ பீடை மசி, நசி, சுவாஹா என்று 16000 ஜெபம்செய்து ஷ குண்டத்திலுள்ள சாம்பல்களை கொஞ்சமும் விடாமல் யெடுத்து ஜலத்தில் கரைத்து ஷ ஜலத்தை பிணியாளன் சிரசில் ஊற்றி பிறகு செம்புத் தகட்டில் தம்பனச் சக்கரம் யெழுதி பூஜைசெய்து குலிசம் கட்ட நீங்கும்.

## அரசுகாலசாந்தி.

அரசு காலத்தில் பிணிவந்தால் முதலில் கூறியதுபோல் விநாயகரையும் கும்பத்தையும் வைத்துப் பூஜை செய்து ஓமகுண்டம் இரண்டு வைத்து அரசு சந்தினக்குச்சி அதில்போட்டு காராம்பசு நெய் விட்டு ஓமம் வளர்த்தி முன்சொன்ன மந்திரத்தையே 5000 ஜெபம் செய்து மேற்கூறியதுபோல் செய்து பிறகு தங்கத்தகட்டில் மாரண சக்கரம் எழுதி பூஜைசெய்து குலிசம்கட்டத் தீரும்.

## துயில்கால் சாந்தி.

துயில் காலத்தில் பிணிவந்தால் முற்கூறியதுபோல் கணபதி பூஜையுங் கும்பபூஜையும்செய்து ஓமகுண்டம் நான்குவைத்து அதுகளில் ஆல், அரசு, அத்தி, இத்தி, முன்னை, வன்னி, முதலிய சமித்துகளிட்டு ஆவின்நெய், இலுப்பைநெய், தேங்காநெய் மூன்றுங் கலந்து தர்ப்பையினுல் அள்ளிவிட்டு ஓமம் வளர்த்தி ஓமகுண்டங்கள் எரியும்போது அதுகளில் நெற்பொரியும் நவதானியமும் கலந்துப் போட்டு ஓம், ரீயும், கிலியும், ஐயும், சவ்வும், ஸ்ரீயும், ரீயும், நசி, நசி,

என்று 16000 உருவு ஜெபித்து மேல்படி ஓமகுண்டங்களில் ஓமம் வளர்த்துவதற்கு இதன்பின்னுலிருக்கும் தம்பனசக்கரம், பேதன சக்கரம், வித்வேஷணசக்கரம், மோகனசக்கரம், ஆகியநான்கையும் தனித்தனி தகடுகளில் யெழுதி ஒவ்வொருசக்கரம் ஒவ்வொரு ஓம குண்டத்தில் போட்டு அதன்மேல் சமித்துகள்போட்டு ஓமம் வளர்த்தவும். முன்போலவே ஷை சாம்பல்களை வாரி ஜலத்திலிட்டு பிணியாளன் சிரசில் புரோக்ஷிக்கவும், வெள்ளியுஞ்செம்பும் சேர்த்துருக்கி தகடடித்து அதிலுச்சாடன சக்கரமெழுதி பூஜைசெய்து குலிசம் கட்ட சாந்தமாகும்.

## மரணக்காலசாந்தி.

மரணக்காலத்தில் பிணிவந்தால் முதற்கூறியதுபோல் கணபதி பூஜையுங் கலசபூஜையுஞ்செய்து ஓமகுண்டங்கள்எட்டுவைத்து ஷை கும்பங்களில் எட்டுசக்கரங்களையும் எழுதி ஒவ்வொன்றில் ஒவ்வொருசக்கரமிட்டு மேல்படி சக்கரமந்திரங்கள் ஒவ்வொன்றிற்கும்16000 உருவு ஜெபித்து அதில் அரசு, வன்னி, நாயுருவி, அத்தி,கருங்காலி, ஆல், அருகுமுதலிய சமித்துகள் இட்டு எருமைநெய், செமறிநெய், இலுப்பநெய், தேங்காநெய், புங்கநெய், புன்னைநெய், வேப்பநெய், பன்றிநெய், கழுதை கொழுப்பையுருக்கிய நெய்முதலியதுகளை கலந்துவிட்டு ஓமம்வளர்த்தி அதில்நெற்பொரி நவதானியம்போட்டுஷை 16000 மந்திரம் ஒவ்வொரு கலசவிழுக்காடு எட்டிற்கும் - 128000 ஜெபம்செய்தபிறகு ஷை சாம்பல்களை வாரி முற்கூறியதுபோல் செய்யவும் பிணியாளனுக்கு குலிசம்கிடையாது.

## சாந்தி சக்கரங்கள்.

அடியிலிருக்கும் சக்கரங்களுக்கு சுத்தி 24 - சூலம்போடவும் சக்கரத்திற்கு அபிஷேகம்செய்து அவல்கடலை பொரிமுதலியதுகளை வைத்து தூபதீபங்காட்டி ஷை சக்கரங்களிலிருக்கும் எழுத்தையே வரிசைக்கிரமமாய் ஜெபிக்கவேண்டும். பிறகுதகட்டைச் சுருட்டிமேலே பஞ்சவர்ண நூல்சுத்தி குலிசம் கட்டவேண்டும்.

(1) உச்சாடனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ |
| ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க |
| ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ |
| வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு |
| ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ |

(4) வசியம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ய<br>அ | வ<br>க | சி<br>டு | ந<br>எ | ம<br>ஙூ |
| சி<br>டு | ந<br>எ | ம<br>ஙூ | ய<br>அ | வ<br>க |
| ம<br>ஙூ | ய<br>அ | வ<br>க | சி<br>டு | ந<br>எ |
| வ<br>க | சி<br>டு | ந<br>எ | ம<br>ஙூ | ய<br>அ |
| ந<br>எ | ம<br>ஙூ | ய<br>அ | வ<br>க | சி<br>டு |

(2) தம்பனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ |
| சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ |
| ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க |
| ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ |
| வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு |

(5) மோகனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந<br>எ | ய<br>அ | வ<br>க | சி<br>டு | ம<br>ஙூ |
| வ<br>க | சி<br>டு | ம<br>ஙூ | ந<br>எ | ய<br>ஙூ |
| ம<br>ஙூ | ந<br>எ | ய<br>அ | வ<br>க | சி<br>டு |
| ய<br>அ | வ<br>க | சி<br>டு | ம<br>ஙூ | ந<br>எ |
| சி<br>டு | ம<br>ஙூ | ந<br>எ | ய<br>அ | வ<br>க |

(3) மாரணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ |
| வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு |
| ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ |
| சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ |
| ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க |

(6) பேதனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம<br>ஙூ | ந<br>எ | ய<br>அ | வ<br>க | சி<br>டு |
| ய<br>அ | வ<br>க | சி<br>டு | ம<br>ஙூ | ந<br>எ |
| சி<br>டு | ம<br>ஙூ | ந<br>எ | ய<br>அ | வ<br>க |
| ந<br>எ | ய<br>அ | வ<br>க | சி<br>டு | ம<br>ஙூ |
| வ<br>க | சி<br>டு | ம<br>ஙூ | ந<br>எ | ய<br>அ |

(7) ஆக்ரஷணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வ<br>க | சி<br>டு | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ |
| ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | வ<br>க | சி<br>டு |
| ம<br>ஙூ | வ<br>க | சி<br>டு | ய<br>அ | ந<br>எ |
| சி<br>டு | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | வ<br>க |
| ந<br>எ | ம<br>ஙூ | வ<br>க | சி<br>டு | ய<br>அ |

(8) வித்வேஷணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு |
| ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ |
| சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ |
| ய<br>அ | ந<br>எ | ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க |
| ம<br>ஙூ | சி<br>டு | வ<br>க | ய<br>அ | ந<br>எ |

# யகு-ம். அதிகாரம்,

## யாத்திரைக் காண்டம்.

உதையமுமுத்தர முச்சியிற்கிழக்கு
நிதமெமநந்தி நிசியினில்மேற்கு
இதமுடன்யாத்திரைக் கிடரிலைநாளும்
பதமிகப்பெறுவர் பக்ஷியினலே.

(இ-ள்.) கரிநாள் வாரசூலை மரணயோகமுதலிய எவ்விதகெட்டநாட்களில் யாத்திரைசெய்ய வடக்கு சூரியோதயத்திலும், கிழக்குப்பகல் உச்சியிலும், மேற்கு சாயுங்காலத்திலும், தெற்கு நடுராத்திரியிலும், ஊர்ப்பயணஞ்செல்ல எவ்விததோஷங்களும் இல்லை ஆதலால் இப்பக்ஷிகளின் வாரஜாமம் அரசுப்பார்த்துப்போவது மெத்தவும் நன்மை. தன்பக்ஷி திசையில் மேற்கூறியவாறு செல்வது மெத்தவும் நன்று.

## ஊண் காலம்.

ஊண்காலத்தில் பிரயாணம்போனல் யாதொருபிணியும் வராது சுகமான போஜனங் கிடைக்கும். சிநேகிதர் உறவாவர் தான்போகுங்காரியமுங் கைகூடும் பொருள்சேரும் சஞ்சலம்வராது.

## நடைக்காலம்.

நடைக்காலத்தில் யாத்திரைபோகக்கூடாது போனால் திரிந்து அலையவேண்டும். போஜனங்கிடைக்காது. போகுங்காரியமும் நடக்காது. எல்லாரும் விரோதமாவர்.

## அரசின்காலம்.

அரசுகாலத்தில் யாத்திரைபோனால் சகலசுகமும் உண்டாகும் போகுங்காரியம் சித்திக்கும் ஒருகுறைவும்வராது.

## துயில்காலம்.

துயில்காலத்தில் யாத்திரைபோனால் மனத்துயரம்வரும் அனேககஷ்டமும் நேரும்.

## மரணகாலம்.

மரணகாலத்தில் யாத்திரைபோனால் திரும்புவதுகடினம். அதிககஷ்டம், சத்துருபயம், பிணிபயம், பொருள்நஷ்டம் முதலிய துண்டாகும்.

## குறிப்பு.

எல்லாவிஷயத்திற்கும் பக்ஷிசத்துரு மித்துருவின் பலனையும் அறியவேண்டும்.

# ௰௨-ம். அதிகாரம்.

## சிற்பகாண்டம்.

இது வீடுமுதலிய கட்டடங்கள் கட்டுவதற்காக தன்பக்ஷியின் காலபலத்தை தெரிவிக்கின்றது.

### ஊண்காலம்-1-2-விநாடியின் பலன்.

௸ காலத்தில் மனைமுதலியது கடக்கால் ஆரம்பஞ் செய்தால் 800 ௵ வரையில் ௸ கட்டடம் செழிப்பாயிருக்கும். 2-விநாடியாகில் 200 ௵ ௸ பலன்நடக்கும்.

## 3-4-5-விநாடியின்பலன்.

மூன்றும் விநாடியாகில் 200௵ வரையிலும், நான்காம் விநாடியாகில் 190௵ வரையிலும், ஐந்தாம் விநாடியாகில் 150௵ வரையிலும், ஷை கட்டடத்தில் வாழ்பவர்களுக்கு போஜன சவுக்கியம் செல்வம் புத்திரமித்திர பால்பாக்கியம் முதலியது குறைவின்றியிருக்கும்.

## நடைக்காலம்.

## 1-2-3-4-5-விநாடியின்பலன்.

முதல்விநாடியாகில் 100௵ அதிகசுகம் இருக்காது. இரண்டாம்விநாடியாகில் 90௵ இதில் சுகமும் துக்கமும்சமமாகும். மூன்றும் விநாடியாகில் 80௵ களவுபோகும். ஷை கட்டடம் கட்டிய 30௵த்திற்குள் அதைக்கட்டினவனுக்கு பொருள்முதலியது சேதமாகி கெட்டவனென்னும் பெயரும்கிடைக்கும். நான்காம் விநாடியாகில் 70௵ ஷை கட்டடம் கட்டியவனுக்கு கடன்தீராது அதிகதுயரம் என்னேரமும் சண்டை ராஜாங்க தண்டனையும் உண்டாகும் 30௵த்திற்குள் மேற்படி கட்டடம் வேற்றோரைச்சேரும். ஐந்தாம் விநாடியாகில் கொஞ்சகாலத்தில் செழிப்பா யிருக்கும். கட்டினவன் பெண்ஜாதி இறப்பள். பிறகு சகல கஷ்டமும் நலியுமுண்டாகும்.

## அரசின் காலம்.

பக்ஷி அரசின்காலத்தில் கட்டடம் ஆரம்பஞ்செய்தால் ஆயிரவருஷக் கணக்காக சுகமாயிருக்கும் வெகுதூரம் பேருங் கீர்த்தியும் சதா அக்கட்டடத்தில் சுபமங்களங்களும் புத்திர களத்திர மித்திரர்களும் யானைக்குதிரை பசுமுதலியதும் லட்சுமி கடாக்ஷமும் பொருந்தியிருக்கும்.

## துயில்மரணக்காலங்கள்.

துயில்காலமும் மரணகாலமும் உதவாது. இக்காலங்களில் கட்டடம் ஆரம்பஞ்செய்பவர் ஷை கட்டடம் முடிவதற்குள் மரணம் அடைவர் இன்னும் விசேஷகெட்ட பலன்களும் சம்பவிக்கும்.

# ௰௩-ம். அதிகாரம்.

## இருதுக்காண்டம்.

அதாவது ஸ்ரீகள் புஷ்பவதியாகுங்காலப்பலன். இதையும் ஜென்மகாலத்தைக்கொண்டு எப்படி பக்ஷி அறிகிறதோ அதேபிரகாரம் ருதுவாகுங் காலத்தைக்கொண்டு பக்ஷி என்னவென்றறிந்து அது அக்காலத்தில் என்னதொழிலி லிருக்குதோ அதையறிந்து அடியிற் கூறியபலனைப் பார்க்கவும். ஆனல் ஸ்ரீகள் ருதுவாகுங்காலம் விசேஷமாய் அனேகருக்குத் தெரிகிறதில்லை. ருதுவாகுங்காலத்தை சரியாய் தெரிந்து மேல்படி கணக்கிட்டு பக்ஷியறிந்து பார்க்கில் ஒருக்காலும் அதன்பலன் பிசகாது.

### ஊண்காலப்பலன்.

ஊண்காலத்தில்ருதுவானல் உண்பதற்கும் உடுப்பதற்கும்குறைவிருக்காது. பால்பாக்கியம் புத்திரபாக்கியம் மங்கிலிய பாக்கியம் முதலியதும் விசேஷிக்கும். அக்காலத்தில் மித்துருபக்ஷி அரசாயிருந்தால் பிறர் உதவியினல் அனேகலாபமுண்டு அவளைமணந்தபுருஷனுக்கும் அவள்காலபலனல் சகல சுகமுமுண்டாகும். சத்துருபக்ஷியரசாயிருந்தால் ஷெ பலன் முற்றுங்கெடும்.

### நடைக்காலப்பலன்.

நடைக்காலத்தில் ருதுவானல் வாழ்வு சுகமுதலியது உண்டாகாது. மித்துரு ஊண் அரசாயிருந்தால் சுபபலன் செய்யும். சத்துருவாயிருந்தால் ருதுவான ஒருவருஷத்திற்குள் தாய் தந்தை பொருள் முதலியதுஞ் சேதமாகும். ஒருக்கால் அவள் வேசியு மாவள் பிணியுண்டாகும்.

### அரசுக்காலப்பலன்.

அரசுக்காலத்தில் ருதுவானல் அவள்வாழ்க்கையை எழுதிமுடியாது. அவளும் ஒருஅரசிதான் ஆவள். ஆனல் சத்துரு ஊணகயிருந்தால் அரைபலன் குறையும் மித்துருவானல் விசேஷ ராஜபோகங்களை அனுபவிப்பாள்.

### துயில்காலப்பலன்.

துயில்காலத்தில் ருதுவானால் அவள்உயிரோடிருப்பது கஷ்டம் சீக்கிறமாகவே மணம்முதலியது நடவாமல் இறப்பள். மித்துரு அரசாகவும் ஊனாகவுமிருந்தால் ஆயுள்பலன்நீடிக்கும் ஆனால் சுகமில்லாமல் என்னேரமும் விசனத்துடனிருப்பள்.

### மரணக்காலப்பலன்.

மரணகாலத்தில் ருதுவானால் ஒருசுகமு மடையாமல் வருஷத்திற்குள் நாசமாவள்.

## ௰௪-ம். அதிகாரம்,

பிரைபார்த்து பெயர்பார்த்து பெயர்பக்ஷி தொழிற் பார்த்துப் பிலமும்பார்த்து, இரைபார்த்து யினம்பார்த்து யினத்துவா திசை பார்த்து யிலக்கும்பார்த்து, நிரையார்த்து நிதிபார்த்து நிதிபோக்கு நெறிபார்த்து நிலையும்பார்த்து, உரைபார்த்து உயிர்பார்த்து வுயிர் பொருத்த சுபம்பார்த்து வுரைத்தல்நன்றே.

### ஆரூடக்காண்டம்.

இப்பட்சிநூல் பார்க்கையில் முதலாவது வாக்கியாக்ஷரம் அல்லது ஒருவன்சொல்லும் முதலெழுத்தும்வந்துநிற்கும் திசையும் சத்துருமித்துருவும் வெற்றிதோல்வியும் வருத்துப்போக்கும்நன்மையும் தீமையும் அறிந்து ஆரூடமுஞ்சொல்வது சகஜமாகும்.

## ஆரூடக்குறிப்பு.

| விஷயங்கள் | மல்லூறு. | ஆந்தை. | காகம். | கோழி. | மயில். |
|---|---|---|---|---|---|
| பூர்-நிறம் | மஞ்சள் | வெள்ளை | சிவப்பு | பச்சை | கறுமை |
| அம-நிறம் | கறுமை | சிவப்பு | மஞ்சள் | வெள்ளை | பச்சை |
| பூர்-ஜாதி | பிராமண | வணிகன் | அரசன் | வேளாள | நீசன் |
| அம-ஜாதி | பிராமண | அரசன் | வணிகன் | வேளாள | நீசன் |
| பூர்-பூதம் | தேய்வு | வாய்வு | பிரிதிவு | அப்பு | ஆகாயம் |
| அம-பூதம் | பிரிதிவு | அப்பு | தேய்வு | வாய்வு | ஆகாயம் |
| பூர்வ-திக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு | வடக்கு | நடு |
| அம-திக்கு | கிழக்கு | வடக்கு | தெற்கு | நடு | மேற்கு |
| உவா-திக்கு | நடு | தெற்கு | கிழக்கு | வடக்கு | மேற்கு |
| லோகங்கள் | பொன் | வெள்ளி | செம்பு | வெங்கல | இரும்பு |
| இனங்கள் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| தாதுமூலசீவ | மூலம் | சீவன் | தாது | மூலம் | சீவன் |
| வலுவு | முக்கால | அரை | ஒன்று | கால் | அரைக்கா |
| காலங்கள் | வருங்கால | முற்கால | வருங்கால | நிகழ்கா | முற்கால |
| கோணங்கள் | நீள்வட்ட | ஐங்கோண | அருகோ | நாற்கோண | முக்கோண |
| ஸ்தானங்கள் | வன்மை | நீர்க்கோ | நார்கால் | கொம்பு | காட்டில் |
| சுவைகள் | இனிப்பு | புளிப்பு | துவர்ப்பு | கார்ப்பு | கசப்பு |
| நிலங்கள் | பாலை | குறிஞ்சி | மருதம் | முல்லை | நெய்தல் |
| வருத்துகள் | வருகிறான் | சேரவருகி | நின்றான் | மீண்டான் | சேர்ந்தா |
| போக்குகள் | பெண் | ஆண் | கள்ளன் | பூமியில் | பெண் |
| நக்ஷத்திரங்கள் | அசுவ-5 | ஆதி-6 | உத்தி-5 | அனு-10 | ஓணம்-1 |
| விரல்கள் | சிறுவிரல் | பவுத்ரவிர | நடுவிரல் | ஆள்காட்டி | பெருவிரல் |
| அவையம் | முகம் | கண்டம் | மார்பு | வயர் | துடை |
| தொகைகள் | பத்து | நூறு | லட்சம் | ஆயிரம் | ஒன்று |
| கெடுவுகள் | வாரம் | பட்சம் | ஆண்டு | மாதம் | சயதி |
| நாணயங்கள் | அணா | பணம் | விராகன் | ரூபா | துட்டு |
| கொடுத்தல் | கெடுவு | நாட்செல் | கொடுப்ப | ஏமாற்று | ஈயான் |
| பதார்த்தம் | மச்சம் | கோழி | ஆடு | பன்றி | பட்சிகள் |
| புசித்தல் | பலகாரம் | கூழ் | சாதம் | நொய்கஞ்சி | பசிபுள் |
| காய்கறி | தண்டு | கீரை | கிழங்கு | காய் | பூவு |
| ஒளித்தல் | வெளியி | காட்டி | உள்வீட் | அயலில் | காணார் |
| நிறைகள் | உழக்கு | இ-படி | மரக்கா | படி | ஆழாக்கு |
| இடைகள் | விராகன் | பலம் | வீசை | சேர் | மணங்கு |
| வஸ்திரம் | நார்மடி | பட்டு | சரிகை | துணி | கந்தை |
| தினங்கள் | ஐந்து | இரண்டு | மூன்று | நாங்கு | ஒன்று |
| வயதுகள் | பெரிய | இளையவ | நீண்ட | குள்ளன் | இருவர் |
| அம்ஸங்கள் | சிறியவர் | குமரன் | இராசன் | விருத்தன் | மரணன் |
| உருவங்கள் | நெடிய | குள்ளன் | ரோமன் | வலுத்த | சமன் |
| கேலிக்குதல் | நெடிய | இளையவர் | சான்றோ | இளையவ் | இருவர் |
| எழுத்துக்கள் | க-பால | உ-குமர | ந-அரசு | ச-விருத் | டு-மரணம் |

# ௰௫-ம். அதிகாரம்.

## அஷ்டகர்மக்காண்டம்.

இது இன்னன்னவாரங்களில் இன்னன்னநக்ஷத்திரம் திதிலக்கணங் கூடியவேளையில் இன்னன்னதொழில் செய்யலாமென்பதை தெரிவிக்கின்றது. "நாள்செய்வது நல்லோர்செய்யார்" யென்னும் பழமொழிப்போல் அடியிற்கூறிய வேளையில் செய்ய காரியஞ் சித்திக்கும்.

### ஆதிவாரம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனி | சஷ்டி | மிதுனம் | மோகனம் |
| பரணி | ஏகாதசி | கடகம் | தம்பனம் |
| கார்த்திகை | துதிகை | சிங்கம் | வித்வேஷணம் |
| ரோகணி | சத்தமி | கன்னி | பேதனம் |
| மிருகசீரிடம் | துவாதசி | துலாம் | உச்சாடனம் |
| திருவாதிரை | திருதிகை | விருச்சிகம் | மாரணம் |
| புனர்பூசம் | அஷ்டமி | தனுசு | வசியம் |
| பூசம் | திரயோதசி | மகரம் | ஆக்ருஷணம் |
| ஆயிலியம் | திருதிகை | கும்பம் | மோகனம் |
| மகம் | நவமி | மீனம் | தம்பனம் |
| பூரம் | அமாவாசை | மேஷம் | வித்வேஷணம் |
| உத்திரம் | பஞ்சமி | ரிஷபம் | மோகனம் |
| அஸ்தம் | தசமி | மிதுனம் | உச்சாடனம் |
| சித்திரை | அமாவாசை | கடகம் | மாரணம் |
| சுவாதி | சஷ்டி | சிங்கம் | வசியம் |
| விசாகம் | பிரதமை | கடகம் | மாரணம் |
| அனுஷம் | சஷ்டி | சிங்கம் | வசியம் |
| கேட்டை | ஏகாதசி | கன்னி | ஆக்ருஷணம் |
| மூலம் | துதிகை | துலாம் | மோகனம் |
| பூராடம் | சத்தமி | விருச்சிகம் | தம்பனம் |
| உத்திராடம் | துவாதசி | தனுசு | வித்வேஷணம் |
| திருவோணம் | திருதிகை | மகரம் | பேதனம் |
| அவிட்டம் | அஷ்டமி | கும்பம் | உச்சாடனம் |
| சதையம் | சதுர்த்தி | மேஷம் | வசியம் |
| பூரட்டாதி | நவமி | கடகம் | ஆக்ருஷணம் |
| உத்திரட்டாதி | திரயோதசி | மீனம் | மாரணம் |
| ரேவதி | சதுர்த்தசி | மிதுனம் | மோகனம் |

## சோமவாரம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனி | பஞ்சமி | கடகம் | தம்பனம் |
| பரணி | தசமி | சிங்கம் | வித்வேஷணம் |
| கார்த்திகை | அமாவாசை | கன்னி | பேதனம் |
| ரோகணி | பிரதமை | துலாம் | உச்சாடனம் |
| மிருகசீரிடம் | சஷ்டி | விருச்சிகம் | மாரணம் |
| திருவாதிரை | ஏகாதசி | தனுசு | வசியம் |
| புனர்பூசம் | துதிகை | மகரம் | ஆக்ருஷணம் |
| பூசம் | சத்தமி | கும்பம் | மோகனம் |
| ஆயிலியம் | துவாதசி | மீனம் | தம்பனம் |
| மகம் | திருதிகை | மேஷம் | வித்வேஷணம் |
| பூரம் | அஷ்டமி | ரிஷபம் | பேதனம் |
| உத்திரம் | திரயோதசி | மிதுனம் | உச்சாடனம் |
| அஸ்தம் | சதுர்த்தசி | கடகம் | மாரணம் |
| சித்திரை | சதுர்த்தி | கன்னி | ஆக்ருஷணம் |
| சுவாதி | நவமி | சிங்கம் | வசியம் |
| விசாகம் | பஞ்சமி | துலாம் | மோகனம் |
| அனுஷம் | தசமி | விருச்சிகம் | தம்பனம் |
| கேட்டை | அமாவாசை | தனுசு | வித்வேஷணம் |
| மூலம் | பிரதமை | மகரம் | பேதனம் |
| பூராடம் | சஷ்டி | கும்பம் | உச்சாடனம் |
| உத்திராடம் | ஏகாதசி | மீனம் | மாரணம் |
| திருவோணம் | துதிகை | மேஷம் | வசியம் |
| அவிட்டம் | சத்தமி | ரிஷபம் | ஆக்ருஷணம் |
| சதையம் | திரயோதசி | கன்னி | பேதனம் |
| பூரட்டாதி | அஷ்டமி | சிங்கம் | வித்வேஷணம் |
| உத்திரட்டாதி | துவாதசி | மிதுனம் | மோகனம் |
| ரேவதி | திருதிகை | கடகம் | தம்பனம் |

## மங்களவாரம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனி | சதுர்த்தி | துலாம் | உச்சாடனம் |
| பரணி | நவமி | விருச்சிகம் | மாரணம் |
| கார்த்திகை | சதுர்த்தசி | தனுசு | வசியம் |
| ரோகணி | பஞ்சமி | மகரம் | ஆக்ருஷணம் |
| மிருகசீரிடம் | தசமி | கும்பம் | மோகனம் |
| திருவாதிரை | அமாவாசை | மீனம் | தம்பனம் |
| புனர்பூசம் | பிரதமை | மேஷம் | வித்வேஷணம் |
| பூசம் | சஷ்டி | ரிஷபம் | பேதனம் |
| ஆயிலியம் | ஏகாதசி | மிதுனம் | உச்சாடனம் |
| மகம் | துதிகை | கடகம் | மாரணம் |
| பூரம் | சத்தமி | சிங்கம் | வசியம் |
| உத்திரம் | துவாதசி | கன்னி | ஆக்ரஷணம் |
| அஸ்தம் | திரிதிகை | துலாம் | மோகனம் |
| சித்திரை | திரயோதசி | தனுசு | வித்வேஷணம் |
| சுவாதி | அஷ்டமி | விருச்சிகம் | தம்பனம் |
| விசாகம் | சதுர்த்தி | மிதுனம் | மாரீணம் |
| அனுஷம் | நவமி | கும்பம் | உச்சாடனம் |
| கேட்டை | சதுர்த்தசி | மீனம் | மாரணம் |
| மூலம் | பஞ்சமி | ரிஷபம் | வசியம் |
| பூராடம் | தசமி | ரிஷபம் | ஆக்ரஷணம் |
| உத்திராடம் | அமாவாசை | மிதுனம் | மோகனம் |
| திருவோணம் | பிரதமை | கடகம் | தம்பனம் |
| அவிட்டம் | சஷ்டி | சிங்கம் | வித்வேஷணம் |
| சதையம் | திரிதிகை | துலாம் | உச்சாடனம் |
| பூரட்டாதி | சத்தமி | விருச்சிகம் | மாரணம் |
| உத்திரட்டாதி | ஏகாதசி | கன்னி | பேதனம் |
| ரேவதி | துவாதசி | தனுசு | வசியம் |

## புதவாரம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனி | திரிதிகை | மகரம் | ஆக்ரஷணம் |
| பரணி | அஷ்டமி | கும்பம் | மோகனம் |
| கார்த்திகை | திரயோதசி | மீனம் | தம்பனம் |
| ரோகணி | சதுர்த்தி | மேஷம் | வித்வேஷணம் |
| மிருகசீரிடம் | நவமி | ரிஷபம் | பேதனம் |
| திருவாதிரை | சதுர்த்தசி | மிதுனம் | உச்சாடனம் |
| புனர்பூசம் | பஞ்சமி | கடகம் | மாரணம் |
| பூசம் | தசமி | சிங்கம் | வசியம் |
| ஆயிலியம் | அமாவாசை | கன்னி | ஆக்ரஷணம் |
| மகம் | பிரதமை | துலாம் | மோஅனம் |
| பூரம் | சஷ்டி | விருச்சிகம் | தம்பனம் |
| உத்திரம் | ஏகாதசி | தனுசு | வித்வேஷணம் |
| அஸ்தம் | துதிகை | மகரம் | பேதனம் |
| சித்திரை | துவாதசி | மீனம் | மாரணம் |
| சுவாதி | சத்தமி | கும்பம் | உச்சாடனம் |
| விசாகம் | திரிதிகை | மேஷம் | வசியம் |
| அனுஷம் | அஷ்டமி | ரிஷபம் | ஆக்ரஷணம் |
| கேட்டை | திரயோதசி | மிதுனம் | மோகனம் |
| மூலம் | சதுர்த்தி | கடகம் | தம்பனம் |
| பூராடம் | நவமி | சிங்கம் | வித்வேஷணம் |
| உத்திராடம் | சதுர்த்தசி | கன்னி | பேதனம் |
| திருவோணம் | பஞ்சமி | துலாம் | உச்சாடனம் |
| அவிட்டம் | தசமி | விருச்சிகம் | மாரணம் |
| சதையம் | பிரதமை | மகரம் | ஆக்ரஷணம் |
| பூரட்டாதி | சஷ்டி | கும்பம் | மோகனம் |
| உத்திரட்டாதி | அமாவாசை | தனுசு | வசியம் |
| ரேவதி | ஏகாதசி | மீனம் | தம்பனம் |

## குருவாரம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனி | துதிகை | மேஷம் | வித்வேஷணம் |
| பரணி | சத்தமி | ரிஷபம் | பேதனம் |
| கார்த்திகை | துவாதசி | மிதுனம் | உச்சாடனம் |
| ரோகணி | திரிதிகை | கடகம் | மாரணம் |
| மிருகசீரிடம் | அஷ்டமி | சிங்கம் | வசியம் |
| திருவாதிரை | திரயோதசி | கன்னி | ஆக்ரஷணம் |
| புனர்பூசம் | சதுர்த்தி | துலாம் | மோகனம் |
| பூசம் | நவமி | விருச்சிகம் | தம்பனம் |
| ஆயிலியம் | சதுர்த்தசி | தனுசு | வித்வேஷணம் |
| மகம் | பஞ்சமி | மகரம் | பேதனம் |
| பூரம் | தசமி | கும்பம் | உச்சாடனம் |
| உத்திரம் | அமாவாசை | மீனம் | மாரணம் |
| அஸ்தம் | பிரதமை | மேஷம் | வசியம் |
| சித்திரை | ஏகாதசி | மிதுனம் | மோகனம் |
| சுவாதி | திருதிகை | ரிஷபம் | பேதனம் |
| விசாகம் | துதிகை | கடகம் | தம்பனம் |
| அனுஷம் | சத்தமி | சிங்கம் | வித்வேஷணம் |
| கேட்டை | துவாதசி | கன்னி | பேதனம் |
| மூலம் | திருதிகை | துலாம் | உச்சாடனம் |
| பூராடம் | அஷ்டமி | விருச்சிகம் | மாரணம் |
| உத்திராடம் | திரயோதசி | தனுசு | வசியம் |
| திருவோணம் | சதுர்த்தசி | மகரம் | ஆக்ரஷணம் |
| அவிட்டம் | நவமி | கும்பம் | மோகனம் |
| சதையம் | பஞ்சமி | மேஷம் | வித்வேஷணம் |
| பூரட்டாதி | தசமி | ரிஷபம் | பேதனம் |
| உத்திரட்டாதி | சதுர்த்தசி | மீனம் | தம்பனம் |
| ரேவதி | துதிகை | துலாம் | மோகனம் |

## சுக்கிரவாரம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனி | பிரதமை | கன்னி | மாரணம் |
| பரணி | சஷ்டி | சிங்கம் | வசியம் |
| கார்த்திகை | ஏகாதசி | கன்னி | ஆக்ரஷணம் |
| ரோகணி | துதிகை | துலாம் | மோகனம் |
| மிருகசீரிடம் | சத்தமி | விருச்சிகம் | தம்பனம் |
| திருவாதிரை | துவாதசி | தனுசு | வித்வேஷணம் |
| புனர்பூசம் | திரிதிகை | மகரம் | பேதனம் |
| பூசம் | அஷ்டமி | கும்பம் | உச்சாடனம் |
| ஆயிலியம் | ஏகாதசி | மீனம் | மாரணம் |
| மகம் | சதுர்த்தி | மேஷம் | வசியம் |
| பூரம் | நவமி | ரிஷபம் | ஆக்ரஷணம் |
| உத்திரம் | சதுர்த்தசி | மிதுனம் | மோகனம் |
| அஸ்தம் | பஞ்சமி | கடகம் | தம்பனம் |
| சித்திரை | அமாவாசை | கன்னி | பேதனம் |
| சுவாதி | தசமி | சிங்கம் | வித்வேஷணம் |
| விசாகம் | பிரதமை | துலாம் | உச்சாடனம் |
| அனுஷம் | சஷ்டி | விருச்சிகம் | மாரணம் |
| கேட்டை | ஏகாதசி | தனுசு | வசியம் |
| மூலம் | துதிகை | மகரம் | ஆக்ரஷணம் |
| பூராடம் | சத்தமி | கும்பம் | மோகனம் |
| உத்திராடம் | துவாதசி | மீனம் | தம்பனம் |
| திருவோணம் | திரிதிகை | மேஷம் | வித்வேஷணம் |
| அவிட்டம் | பஞ்சமி | தனுசு | பேதனம் |
| சதையம் | திரயோதசி | மிதுனம் | உச்சாடனம் |
| பூரட்டாதி | சதுர்த்தி | கடகம் | மாரணம் |
| உத்திரட்டாதி | நவமி | சிங்கம் | வசியம் |
| ரேவதி | சதுர்த்தசி | கன்னி | ஆக்ரஷணம் |

## சனிவாரம்.

| | | | |
|---|---|---|---|
| அசுவனி | பஞ்சமி | துலாம் | மோகனம் |
| பரணி | தசமி | விருச்சிகம் | தம்பனம் |
| கார்த்திகை | அமாவாசை | தனுசு | வித்வேஷணம் |
| ரோகணி | பிரதமை | மகரம் | பேதனம் |
| மிருகசீரிடம் | சஷ்டி | கும்பம் | உச்சாடனம் |
| திருவாதிரை | ஏகாதசி | மீனம் | மாரணம் |
| புனர்பூசம் | துதிகை | மேஷம் | வசியம் |
| பூசம் | சத்தமி | ரிஷபம் | ஆக்ரஷணம் |
| ஆயிலியம் | துவாதசி | மிதுனம் | மோகனம் |
| மகம் | திரிதிகை | கடகம் | தம்பனம் |
| பூரம் | அஷ்டமி | சிங்கம் | வித்வேஷணம் |
| உத்திரம் | திரயோதசி | கன்னி | பேதனம் |
| அஸ்தம் | சதுர்த்தி | துலாம் | உச்சாடனம் |
| சித்திரை | சதுர்த்தசி | தனுசு | வசியம் |
| சுவாதி | நவமி | விருச்சிகம் | மாரணம் |
| விசாகம் | பஞ்சமி | தனுசு | ஆக்ரஷணம் |
| அனுஷம் | தசமி | கும்பம் | மோகனம் |
| கேட்டை | அமாவாசை | மீனம் | தம்பனம் |
| மூலம் | பிரதமை | மேஷம் | வித்வேஷணம் |
| பூராடம் | சஷ்டி | ரிஷபம் | பேதனம் |
| உத்திராடம் | ஏகாதசி | மிதுனம் | உச்சாடனம் |
| திருவோணம் | துதிகை | கடகம் | மாரணம் |
| அவிட்டம் | சத்தமி | சிங்கம் | வசியம் |
| சதையம் | திரிதிகை | துலாம் | மோகனம் |
| பூரட்டாதி | அஷ்டமி | விருச்சிகம் | தம்பனம் |
| உத்திரட்டாதி | துவாதசி | கன்னி | ஆக்ரஷணம் |
| ரேவதி | திரயோதசி | தனுசு | வித்வேஷணம் |

# ௰௬-ம். அதிகாரம்.

## மூலிகைக்காண்டம்.

### பூர்வபக்ஷம் பக்ஷிமூலிகை.

வல்லூருக்கு அரக்கீரை, ஆந்தைக்கு சிருகீரை, காகத்திற்கு சாரணை, கோழிக்கு தகரை, மயிலுக்கு நங்கிலி.

### அமரபக்ஷம் பக்ஷிமூலிகை.

வல்லூருக்கு நாய்க்கடுகு; ஆந்தைக்கு அரக்கீரை; காகத்திற்கு அவுரி, கோழிக்கு குப்பைமேனி, மயிலுக்கு தைவேளை.

### குறிப்பு.

ஷை மூலிகைக்கு சாபவிமோசனம் செய்தபிறகு மூலிகையை அடியில்கூறியபடி பிடுங்கவேண்டும் இதற்கு எம்முடைய மூலிகை ஜாலரத்தினம் மென்னும் புத்தகத்தைப் பார்த்தால் அதில் மூலிகை சாபவிமோசனம் எழுதியிருக்கிறது.

தான் யின்னபக்ஷத்தில் பிரந்தவனென்பதைக் கவனித்து தன்னுடையபக்ஷி யின்னதென்பதையு மறிந்து அதன்மூலிகையை அடியிற்கூறிய தொழில்களுக்கு அந்தந்தொழிலுக்குறிய திக்கில் முகம் நோக்கி நிர்வாணமாகநின்று அதற்குறியபூஜை முதலியதும் செய்து பிடுங்கவேண்டும்.

### மூலிகை தொழிலுக்கு முகம்நோக்கும் திக்கு.

| | |
|---|---|
| வடக்கு—வித்வேஷணம் மோகனம் | சுபம் |
| கிழக்கு—வசியம் ஆக்ருஷணம் | |
| தெற்கு—பேதனம் மாரணம் | அசுபம் |
| மேற்கு—உச்சாடனம் தம்பனம் | |

சுபகாரியத்திற்கு வில்வமரம் சிவாலயம் நந்தவனம் ஆற்றோரம் முதலிய யிடங்களில் செய்யவும்.

வசியம் ஆக்ருஷணம் அரசகாலத்திலும் மோகனம் தம்பனம் ஊண்காலத்திலும் செய்ய சித்திக்கும்.

## ஷை மூலிகை வேர்பிடுங்குங்காலம்.

பூர்வபக்ஷம் பகல்—ஆக்ரஷணம், வசியம்.
இரவு—மோகனம், தம்பனம்.
அமரபக்ஷம் பகல்—உச்சாடனம், வித்வேஷணம்.
இரவு—மோகனம், தம்பனம்.

ஊண்காலத்தில் வேர்பிடிங்கினுக்கால் காரியம் சித்திக்கும் சத்துருமித்துரு ஆவான். சோபனகாரியங்கூடும், பீடைவிலகும். சர்வ வசியமும் செய்யும்.

அரசுகாலத்தில்பிடிங்கினுக்கால் சர்வவசியமும் அனேகநன்மைகளும் உண்டாகும். சகலவிஷயங்களிலும் தன்னை ஒருவர் வெல்ல முடியாது.

ஷை வேர்களைப்பிடிங்கி தங்கத்தாயத்தைக்குள் பொதிந்து சிரசில் வைத்திருக்க ஷை காரியங்கள் சித்திக்கும்.

## குறிப்பு.

இந்த மூலிகைகளின் விவரத்தை யெழுதப்புகுந்தால் இதைப்போல் இன்னொருபுத்தகமாகும். அதுவுமல்லாமல் இதை விவரமாய் எழுதினுல் துஷ்டஜனங்களுக்கு சந்தோஷமும் மற்ற யெளிய யேழைகளுக்கு கொடுமையும் கவர்ன்மெண்டார் சட்டத்துக்கு விரோதமுமாகு மென்பதைக் கவனித்து எழுதாமல் நிருத்தினேன்.

---


## மூலிகைஜால ரத்தினம்.
### 1-2 பாகம்.

இந்த மூலிகைஜால ரத்தினமென்னும் புத்தகத்தில் ஆடும்மூலிகை 64-ன் விவரங்களும், அவைகள் வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், ஆகிரஷணம், மாரணம் முதலிய அஷ்டமாசித்துகளை ஆடும்விவரங்களும் அவைகள் வயித்தியத்திற்கு உபயோகப்படும்படியான விவரங்களும் அனேகவசியமுறைகளும், தேள், பாம்புமுதலிய விஷத்துக்கு அனேகவிசித்திரப் பிரயோகங்களும், அதிக யெளியநடைகளாகவும் அவைகளின் உரைகளுடனும் அதிக விவரமாய் அச்சிட்டிருக்கின்றது. இதன் விலை அணா-8

பூ. சு. குப்புசாமி முதலியார் அண்டுசன்ஸ்
ஸ்ரீ; சுந்தரவிலாசம் பிரஸ், வேப்பேரி போஸ்ட் மதராஸ்.

## 17-ம். அதிகாரம்.

# அமுர்தநிலைக்காண்டம்.

☞ அன்புமிகுந்த அனைவத்ராளுக்கும் அறிவிக்கும் விஷயம்யாதெனில்? இந்த 17 - ம் அதிகாரம் முன்னால் அனுப்பிவந்த புத்தகங்களில் சேர்க்கவில்லை. சுதேசங்களிலும் பிரதேசங்களிலும் வாழும் எனது நண்பர்கள் அடிக்கடி இவ்விஷயத்தை தெரிவிக்கும்படியாயும் இப்புத்தகத்தில் சேர்த்து அனுப்பவேண்டு மென்றும் எழுதுவதால் இன்று இக்காண்டமும் எழுதலாயினேன். அமுர்தநிலைவிவரம் கொக்கோகம், இல்முனிசா, கயிலாசநாதர் சதகம் முதலிய நூல்களில் எழுதியிருந்தாலும் அது அமுர்தநிலைசூக்ஷம் ஆகாது கொக்கோகம் என்னும் சாஸ்திரத்தின் கருத்தும், அது எத்தனைவகைப்படுமென்பதையும், தற்காலத்தில் அரசாங்கத்தாரால், தொடக்கூடாதென்று சட்டம் ஏற்பட்டிருக்கும் புஸ்தகம் உபயோகமற்றதென்பதும், ஆதிசாஸ்திரம் யிதுவல்லவென்பதும், தற்காலத்தில் உலாவும் கொக்கோகம் ஞானசாஸ்திரமென்பதும், என்னால் எழுதப்பட்ட "கண்ருவிநாடகம்" என்னும் புத்தகத்தைப் பார்வையிட ஆதியோடந்தமாய் தெரியவரும். உலகத்தில் அனேகர் "எனக்குகொக்கோகம்தெரியும், அமுர்தநிலைசூக்ஷமும், நரம்படி வித்தையும்தெரியும்" என்று சொல்லுபவரெல்லாம் வாயால் உளறுகிறவர்களேயன்றி உண்மையறிந்தவரல்லர். உலகத்தில் ஆயிரத்திலொருவன் ஷை சாஸ்திரங்களின் உண்மைகளைக் கண்டிருப்பதுங்கடினம். அப்படிக்கண்டவன் உண்மைஞானியும் உலகத்தை விரும்பாதவனுமாயிருப்பான். அப்படிப்பட்டவனிடத்தில் தொண்டுசெய்து கற்றாலொழிய எத்தனை நூல்கள் வாசித்தாலும் ஷை சூக்ஷம் அறியமுடியாது. அப்படிக்கற்றவன் பிறருக்கு சொல்லவும் மாட்டான். அப்படிப்பட்டவிஷயத்தை யான் எழுதுவதென்றால் குருவாக்குக்கும் இராஜாங்கத்தார் சட்டத்துக்கும் விரோதமாகுமென்பது எவ்லோருக்குஞ் சொல்லாமலேவிளங்கும். ஆயினும் எமது நண்பர்களின் வேண்டுகோளின்படி ஜனங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய சில உலகான்மையான விஷயங்களை எழுதுகிறேன். அதாவது அமுர்தம் நிற்குமிடத்தில் தட்டுவதற்கு நரம்படிவித்தையென்றும் வர்மவித்தையென்றும் சொல்லப்படும். அந்த வர்மமானது படுவர்மம் 12 - என்றும் தொடுவர்மம் 96 என்றுஞ் சொல்லப்படும். அப்போதுவர்மம் மொத்தம் 108-ஆகும். படுவர்மமாவது வேகமாக விரலினால் குத்துதல் அல்லது குச்சியினால் தட்டுதல், தொடுவர்மம் இலேசாக கையால் வர்மமிருக்குமிடத்தில் தடவுதல். இதில்படுவர்மஞ்செய்தால் மூச்சுபேச்சில்லாமல் விழுந்துவிடுவார்கள். அதுவுமல்லாமல் வர்மம் முன்புறமிருந்தால் அதற்குநேராக முதுகுபக்கத்தில் தட்டினால் அதேமாதிரியாய் அபாயம்நேர்ந்துவிடும். எனெனில் அமுர்தநிலையின் சக்தியானது இரும்பைக் காந்தமிழுப்பதுபோல்அவ்விடமிழுக்கும். சிலர்குச்சிபட்டுயிறந்துவிட்டானென்பதும், திடீலென்று இறந்துவிட்டானென்பதும் ஷை வர்மஸ்தானங்களில்

தெரியாமல் ஏதாவது பட்டுவிடுவதேயாகும். இதினால் அபாயம் நேர்ந்தால் மூணேமுக்கால் நாழிகை அல்லது $1\frac{1}{2}$ - மணிக்குள் சவுக்கியப் படுத்தவேண்டும். இல்லாவிடில் எமன்கையில் சிக்கின உயிராகும். இதை சவுக்கியப்படுத்த ஆஸ்பத்திரியில் ஓர்வித எலக்ட்ரிக்பெட்டி ELETRICBOX இருக்கிறது அதனால் சவுக்கியப்பட்டுவிடும். ஆஸ்பத்திரியில்லாத வீடுகளிலிருப்பவர் ஷை வர்மம்பட்டவனை தனிமையானவிடத்தில் உட்காரவைத்து கால்களில் அவன்தலையை சாய்த்துக்கொண்டு அவன்காலிரண்டையும் நன்றாய்நீட்டிவைத்து பிடரியில் ஒருதட்டுதட்டி உச்சியில்பளீரெனத்தட்டினால்ஒருவாறு மூர்ச்சித்தவன்போல் கண்ணை விழிப்பான். உடனே விசிறிகளால்விசிறி களைப்பாற்றி கஞ்சிமுதலியது கொடுத்தால் சவுக்கியப்படுமென்று சிலநூல்களில் எழுதியிருக்கின்றது. ஆதலால் தான் வர்மவித்தையை சொல்லக்கூடாதென்றும், அதை அஜாக்கிரதையாய் செய்தால் உயிருக்கேமோசமென்றும் பெரியோர்கள் ஒளித்துவிட்டார்கள். இனி வர்மத்தின்விவரம் சுருக்கமா யெழுதுகிறேன். கொக்கோகத்தில் 15-திதிகளுக்கு 15-யிடங்களில் அமுர்தம் நிற்குமென்று எழுதியதுசரியல்ல. ஏனெனில் முன்சொல்லியபடி 108 - இடங்களுக்கு மேலுமாகும் அதுவுமல்லாமல் அந்தயிடத்திக்கு 7 - வது யிடத்தில் விஷம் தங்கியிருக்கும் அதாவது அமரபட்சம்வாயில் அமுர்தம் நின்றால் அப்போது ஸ்திரீயின் அல்குலில் விஷமிருக்கும் அக்காலத்தில் ஒருவன்போகஞ்செய்தால் ஷை விஷத்தினால் மரணமடைவான். அதுவுமல்லாமல் அப்படி விஷமிருக்குமிடத்தில் கடிப்பதும் சுவைப்பதும் கூடாது. இதுவிஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பதற்கே அமுர்தநிலை தெரிந்துக்கொள்ள வேண்டுமென்பது பெரியோர்களின் கருத்தாகும். அமுர்தநிலைதெரியவேண்டுமானால் முதலில் அருக்கநிலை தெரியவேண்டும். அதாவது எந்தந்தநாழிகையில் எந்தெந்தயிடத்தில் அருக்கன் நிற்கிறானென்பதே இதுதெரிந்துக்கொள்வது மெத்தக்கடினம். சோதிடசாஸ்திரமும் கொஞ்சம் தெரியவேண்டும். இப்பக்ஷி சாஸ்திரக்கணிதம் நன்றாய் தெரிந்திருக்கவேண்டும் அப்படி தெரிந்தபோதிலும் மேல்படி காரியம்சித்தியாகாது. ஏனெனில் பக்ஷிசாஸ்திரத்திற்குசாபம் உண்டென்றும் அதை நிவர்த்திக்கவேண்டுமென்றும் பக்ஷிகள் வசியமாக வேண்டுமென்றும் முதலிலேயே எழுதியிருக்கிறேன். அதுவுமல்லாமல் பிரதி தினமும் ஒவ்வொருபக்ஷி படுபக்ஷியாக செத்துக்கிடக்குமென்றும் இப்புத்தகத்தில் தெரிவித்திருக்கிறேன், ஒருபட்சிசெத்திருக்குங்காலத்தில் மற்றநான்குபட்சிகளுக்கும் வலிவுகிடையாது. ஆதலால் செத்தபட்சியை எழுப்பவேண்டும். இதற்குதான் "அஞ்சுபேர் அண்ணன்தம்பி அதிலே ஒருவன் நெம்பில் பஞ்சைப்போல் நால்வருமே என்தங்கமே பல்லையிளிப்பாரடி" என்றார் மெய்ஞ்ஞானத் தங்கத்தாரும், இவ்விஷயம் யோகிக்கும் ஞானிக்கும் முடியுமே தவிர மற்றசாதாரண ஜனங்களுக்கு கனவிலும்முடியாது. இன்னும் இதைச்சார்ந் விஷயம் எவ்வளவோயிருக்கிறது. அதுகளையெல்லாம் எழுதவதென்றால் முடியாது. செத்தபட்சியை எழுப்பமுடிந்தால் தான் அமுர்தநிலை சூட்சம்சித்திக்கும். அமுர்தநிலையென்பது நமது சரீரத்தின் நரம்பில் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் இரத்த ஓட்டம், அது பூர்வபட்சத்தில் இடப்புரமிரு

ந்து வலப்புரமாயும், அமாபக்ஷத்தில் வலப்புரமிருந்து இடப்புரமாகவும் ஓடும் அதில் ஸ்பிரிட் லெவல் SPIRITLEYEL என்னும் மட்டம்பார்க்குங் கருவியில் ஜலக்குறைவு ஓடுவதுபோல் அவ்வளவே அளவில் வர்மம் ஷிநாடியில் ஓடிநிற்கும். அதற்குதான் அமுர்தநிலை சூக்ஷமென்னப்படும். இதற்கு தொடு குறிபட்சிதெரிந்து அமுர்தநிலை தெரியவேண்டும். இவ்வளவு அருமையான விஷயம் பகிரங்கமாகிவிட்டால் உலோபிகள் உத்தமஸ்திரீகளை கெடுத்தவருவதோடு தங்கள் உயிரையும் பிறர்உயிரையும் இராஜாங்கத்தார் சட்டத்தின் கையில் ஒப்புவிக்க நேறுமென்றே ஒளித்துவைக்கப்பட் டிருப்பதாகும்.

வாய்மொழியின் சப்தாக்ஷரத்தைப் பக்ஷியாக்கி
அவர்கள்நிலையில் தொடுகுறியும் அறிந்து
பலன் சொல்லுகைக்கு வகுத்துரைத்தல்.

## அகாரச்சத்தம்.

அ. காணும்அகாரப்பே ராளுடையகண்டமுதல்
காணுஞ்சிரசுஆந்தை கைகாகம்—பேணிக்
கோழியுடம்பு, மயில் முன்பின்னதும், வலியான்
தாழுமிருசரணந் தான். இ-உ-எ-ஒ-அ.

## இகாரச்சத்தம்.

இ. தாணும்இகாரப்பே ராளுடையகண்டமுதல்
தானர்தலைகாகம், கைக்கோழி—மானுய்
உடலேமயில், முன்பின் வல்லூராங் கால்ஆந்தை
மடலேபுரிவாய் வகு. உ-எ-ஒ-அ-இ.

## உகாரச்சத்தம்.

உ. அண்டும்உகாரப்பே ராகுநாள்சென்னிமுதல்
கண்டமாங்கோழி, யது கைமயிலாம்—உண்ப
வல்லூருடல்முன்பின் வாழுமேயாந்தை, யது
நல்லகால்காகமாய் நாட்டு. எ-ஒ-அ-இ-உ

## எகாரச்சத்தம்.

எ. நாட்டும்எகாரப்பே ராளுடையசென்னிமுதல்
ஊட்டுங்கைவல்லூர், உடலாந்தை—நாட்டிடுமுன்
பின்னதுங்காகம் பெருத்ததோர் கோழிக்கால்
நன்னவலரே நவில், ஒ-அ-இ-உ-எ.

### ஒ கா ர ச் ச த் த ம்.

ஒ. நவிலும்ஒகாரப்பேர் நாள்சேர்தலைவலியான்
கவலுங் கையாந்தை யுடல்காகமே—புவியிலே
தேனேமுன்பின்கோழி தேவர்கால்மடக்கு
மானேமயில்தான் மதி அ-இ-உ-எ-ஒ.

### அமுர்தஸ்தான அலங்காரம்.

பூர்வபக்ஷ அமரபக்ஷங்களுக்கு அமுர்தநிலை ஏற்றமுமிறக்கமும் ஆகியதிதிகளினால் அறியத்தக்க பதாதிகேசம்.

☞ ஷை தொடுகுறிப்பக்ஷிகள் எந்தந்த திதிகளில் அடியிற் கண்டவாறு நிற்கிறதோ அவ்விடத்தில் அமுர்தநிலையென்றறியவும்.

### பி ர த மை - அடி.

காலடியாம் வல்லூறு, கணைக்காலும்மாந்தையாம்
மேலெழுந்ததாளும்வெண் காகமாம்—மாலரர்
படிக்குறங்குகோழியாம் பணவல்குல்மாதே
முடிக்கு மயிலென்றே மொழி.

### து தி கை - ப ர டு.

அறியுப்பரவேல்லூ றுருகுமாந்தோழி
முறியாந்தைமேற்கொண்டை மின்னே—சரிபா
அணிமுழந்தாள்காகமது தொடையேகோழி
மணிகுய்யமஞ்ஞையென வை.

### திரிதிகை-கணைக்கால்.

கணைக்காலாம்வல்லூறு, கால்கொண்டையாந்தை
பணிக்குமுழந்தாள் பகர்காகம்—கணித்த
தொடையாகுங்கோழி குய்யமயில்மெல்லி
கடையுமிடை துணையாங் காண்.

### ச தூர்த்தி-முழந்தாள்-இடை.

வல்லூறிடுப்பு வளர், முதுகுதானந்தை
கல்லாதமேன்முதுகுங் காக்கையாம்—சொல்லரிய

கோழிபிடரி, மயில் கைப்பட்டைக் கூறியதன்
தோழியினியதெனச் சொல்.

## பஞ்சமி-துடை-உந்தி.

வல்லூரேயுந்தி, வயிராங்தை, மார்புகோழி
அல்லாருமென்முலையாங் கோழி—தொல்லுலகில்
வண்ணமயில்கைக்கீழா மட்டவிழுங்கார்குழலாய்
பண்ணவர்கள்சொன்னார் பரிந்து.

## சஷ்டி-நிதம்பம்-கீழ்வயறு.

கீழ்வயறுவல்லூறு, கேள்வயறுமாந்தையாம்
வாழ்மார்புங்காகமேனும் வாணுதலாய்—தாழ்வில்
வழுவிலாக்கோழி, மயிலிடுப்பிடம்வல்லூ
றெழுவிலாவென்றே யியம்பு.

## சப்தமி-இடை-கீழ்முதுகு.

கீழ்முதுகுவல்லூறு, கிளர்மேல்முதுகாந்தை
வாழ்பிடரிக்காகமாம் வாணுதலாய்—கோழி
வல்விலாத், தோகை, மயிலாமிடம்வலத்தே
யில்விலாவென்றே யியம்பு.

## அஷ்டமி-உந்தி-வயறு.

வல்லூறுதான்வயராம், வல்லாந்தைமார்பாகுஞ்
சொல்லியகாகமுதுவாகும்—புல்லியே
கோழியிடைவிலாக் கோலமிகுமாமயிலே
தோழிவலவிலாச் சொல்.

## நவமி-வயறு-மார்பு.

ஒழியாதமார்வலியான் கழுவதோளிரண்டாந்தை
முழுதுடல்முன்காகம் பின்கோழி—பழுதறவே

காலாகுமஞ்சையென காமுகர்க்குகாகினியில்
மேலான நூலிதென்று மேவு.

## தசமி - கை.

கையிரண்டேம்வல்லூறு கழுத்துமேலாந்தை
மெய்யுடலும்முன்காகம் பின்கோழிப்—பையத்
துடையிரண்டேந்தோகைமயிற் றாய்மொழியாயாய்ந்து
வடிவமொன் றுமானிடர்க்கு வை.

## ஏகாதசி-பாளியங்கை.

பாளியாம்வல்லூறு பருமுன்கையாந்தைக்
காளுமுழங்கைக்கருங்காகம்—காளேக்கே
கோண்டையாங்கோழி கிளர்தோள்மயிலாகும்
தண்டமிழ்வல்லாய்நீ சாற்று.

## துவாதசி-விரல்.

மூட்டேவிரல்வல்லூறு முழுவிரலாமாந்தையது
நெட்டவிரல்காகமாம் நேரிழையீர்—காட்டாணி
மோதிரமாங்கோழி முண்சுண்டேதோகையதாம்
ஆதரவாய்சொன்னே மறி.

## திரயோதசி-கழுத்து.

வல்லூறுவன்கழுத்து வல்லாந்தைவாயாகும்
மெல்லியதாங்காதம் விழியிரண்டாம்—சொல்லரிய
கோழியதுநெற்றிக் குலவுமயில்கூந்தல்
ஆழியுலகத்தா யறி.

## சதுர்த்தசி-தலை.

செய்யதலைவல்லூறு சீரார்முதுகாந்தை
கையிரண்டுங்காகமாங் கண்டாயே—மொய்குழலாய்

நாபியாங்கோழி நலமான தாளிரண்டுந்
தோகை மயிலேன்றே சொலு.

## அமாவாசை கூந்தல்.

கூந்தல்மயிலாகும் கோழியேநெற்றியதாம்
வாய்ந்தசேவிகண், மூக்கு வாழ்காகம்—ஏந்திழையீர்
வாயாகுமாந்தை மணிக்கழுத்தேவல்லூறு
மாயாதுரைக்கும் வகை.

இச்செய்யுள் 15-ம்-அங்காமிர்தமன்றியும்
தொடுகுறிக்குஞ் சொல்லப்படும்.

முற்றுப்பெற்றது.

# பஞ்சபூத ரகசியமென்னும்

## பஞ்சபக்ஷி ரத்தினம்.

முற்றுப் பெற்றது.

21 - கதைகள் அடங்கிய

# கலியுக விநோதகதை,

## இதிலடங்கிய கதைகளின் பெயர்.

1. சாஸ்திரத்தைநம்பி ஜெயமடைந்தவன்கதை. 2. விவேகமற்ற வீரகோபாலன்கதை. 3. ஸ்ரீதேவிக்கும் மூதேவிக்கும் வழக்குண்டான கதை. 4. விபசாரியின்கதை. 5. வர்த்தகக்குமாரன் வேசியால்கெட்டகதை. 6. வெரிமுண்டாகொடுக்குக்கதை. 7. புகையிலையின் மகுத்துவக்கதை. 8. சோதிடவல்லவன்கதை. 9. பிராமணப்பெண்கதை. 10. வைதியன்கதை. 11. சுயம்பாகிக்கதை. 12. சந்தியாவந்தனக்கதை. 13. ஈயாபத்தன்கதை. 14. மூக்கரையன்கதை. 15. ஆயிரம்புளுவன்கதை, 16. அரக்கமாட்டாதவன்கூத்தில் அன்பத்தெட்டறுவாள் யென்னுங்கதை. 17. பெண்பார்க்குந்தூதன்கதை. 18. பிராமணன் பூனையாகப்பிறந்தகதை. 19. கெட்டகுமாரன்கதை. 20. மதிகெட்டான்கதை. 21. வைராக்கியவல்லவன்கதை.

இதன் விலை அணா 0 8 0

உ

தேவிசகாயம்.

# அனுபோகவயித்திய பிரம்மரகசியம்.

## 8-காண்டம்சேர்ந்தது,

இந்த (அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும்) நூலானது ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயிசுவாமிகளால் நெடுவருடங்களாக காசிமுதலான திவ்யக்ஷேத்திரயாத்திரைவாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள்யாவையும் ஒவ்வொருவரும் வயித்தியரைவேண்டாமல் தாங்களே செய்துக்கொள்ளத்தகுந்த மூன்னூறு முறைகளடங்கிய (அனுபோகவயித்தியபிரம்மரகசியமென்னும்) புத்தகம்-1-2-3-4-5-6-7-8-காண்ட ங்களாகப்பிரித்து அச்சிட்டிருக்கிறது. ஒவ்வொருகாண்டங்களிலும் சுமார் (300) முறைகளுக்குக் குறையாமல் அடங்கியிருபபதன்னியில் ஒவ்வொரு மருந்துகளின் பாகமும், இடைக்குறிப்பும், புடதிட்டமும், அறைப்புகணக்கும், அளவின் நிதானமும், செய்பாகமும்,உண்பாகமும்,பத்தியவிதியும், [illegible] ரியும் இவைகள்யாவும் உயாந்த கிளேஸ்கடிதத்தில் அச்சிட்டு புல்கலிகோபயிண்டுசெய்து விக்கிறயஞ்செய்துவருகிறது முன்பணம் அனுப்பாதவர்கட்கு வால்யூபேபில் போஸ்டாகவும் அனுப்பப்படும்.

1-முதல் 8-காண்டமும் ஒரேகட்டடம். 4 0 0

எமதுவிலாசம்,

பூ. சு. குப்புசாமிமுதலியார்

அண்டு சன்ஸ்

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடம்.

வேப்பேரி போஸ்ட், மதராஸ்.